வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஊ‍ළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 17.09.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 261 பக்கங்கள் : 12

## தமிழின விடுதலை இலட்சியத்துக்காக பொது வேட்பாளருக்கு வாக்களிப்பேன்

### கிளிநொச்சி கூட்டத்தில் மாவை சேனாதிராசா

கிளிநொச்சி, செப்ரெம்பர் 17

**தமிழின விடுதலைக்கான இலட்சியத்துக்கான பயணத்தில் அணி திரண்டுள்ள பெருந்தொகையான உங்களைப்போன்று என்னுடைய வாக்கையும் அளிப்பேன் என்ற உறுதிப்பாட்டுடன் தெரிவிக்கின்றேன் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.**



நேற்றைய கூட்டத்தில் பங்கேற்ற தமிழ் அரசு தலைவர் சோ. சேனாதிராசா...!

கிளிநொச்சி பசுமைப் பூங்கவில் நேற்று திங்கட்கிழமை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் ஏற்பாட்டில் நடைபெற்ற தமிழ் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரனை ஆதரித்து 'தமிழ்த் தேசிய இனத்தின் எழுச்சியே தமிழ்த் தேசத்தின் மீட்சி' எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்-

தமிழர்களின் எழுச்சி நிகழ்வான நாளாகவும் தமிழனம் விடுதலை பெறதாத நிலையில் நடைபெறுகின்ற மற்றொரு ஜனாதிபதி தேர்தலாகவும் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறுகின்ற தேர்தல் அமைகின்றது.

அவ்விதமான தேர்தலில் எமது விடுதலையையும், அதற்கான இலட்சியப் பயணதுக்காகவும் எங்களுடைய வாக்குகளை பயன்படுத்துவோம் என்ற உறுதியோடு இந்த எழுச்சி நிகழ்வில் பங்கெடுத்துள்ளீர்கள்.

விடுதலைக்கான போராட்டத்தில் மக்களையும், போராளிகளையும் பலிகொடுத்துள்ளோம். அந்த வகையில் நாம் எமது பயணத்திலே உறுதியாக இருக்கின்றோம், அந்தப் பயணத்தினை வலுவானதாக மேற்கொள்ள வேண்டும் என்ற 11

## ஜனாதிபதி தேர்தலில் சஜித்துக்கே ஆதரவு!

### தமிழ் அரசு நேற்று இறுதி முடிவு

வவுனியா, செப். 17

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில், ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு, ஆதரவு வழங்குவது என, மத்திய குழு தீர்மானித்துள்ளதாகவும், மக்கள் அதற்கமைவாக வாக்களிக்க வேண்டும் எனவும், இலங்கை தமிழ் அரசுக் கட்சி அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான உயர் மட்ட கலந்துரையாடல், நேற்று வவுனியாவில் உள்ள தமிழ் அரசுக் கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

கூட்டத்தில், கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர்களான 11

## தமிழ் அரசின் தீர்மானத்தை எதிர்க்கின்றார் சிறிதரன்!

வவுனியா, செப். 17

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை தாம் ஆதரிப்பதாக தமிழரசுக்கட்சி அறிக்கை வெளியிட்டுள்ள நிலையில், குறித்த தீர்மானத்தை தான் எதிர்ப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்றைய கூட்டத்தில் ஐந்து பேர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவிக்கும் நிலைப்பாட்டில் இருந்தார்கள்.

அது தொடர்பாக ஓர் அறிக்கையும் எழுதப்பட்டிருந்தது. அந்த அறிக்கையில் ஏற்கனவே 11

## இறுதிக்கட்ட பிரசாரம் தீவிரம்!

கொழும்பு, செப். 17

ஜனாதிபதி தேர்தலுக்குரிய பிரசார நடவடிக்கைகள் யாவும் நாளை நள்ளிரவுடன் ஒயவுள்ளன. இந்நிலையில் கடைசி பிரசாரக் கூட்டத்தை பிரமாண்டாகவும் வெற்றிகரமாகவும் நடத்தி முடிப்பதற்கு பிரதான அரசியல் கட்சிகள் தயாராகி 11

## எந்த வேட்பாளர் வென்றாலும் எமக்கு பிரச்னை கிடையாது!

### தீர்வுக்காக பணியாற்றுவோம் என்கிறார் சுமந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், செப். 17

இம்முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் மூன்று பிரதான வேட்பாளர்களையும் அதிகாரப் பகிர்வு குறித்த வாக்குறுதியைக் கொடுக்க வைத்திருக்கிறோம். எனவே மூவரில் எந்த வேட்பாளர் வென்றாலும், தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதை முன்னிறுத்திய நடவடிக்கைகளில் தமிழரசுக்கட்சி தொடர்ந்து ஈடுபடும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

எங்களுடைய நோக்கம் இவரோ அல்லது அவரோ வெல்ல வேண்டும் என்பது அல்ல. மாறாக எமது மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு பெறப்படவேண்டும் என்பதே நோக்கமாகும் என்றும் அவர் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் மூவர் பிரதான வேட்பாளர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் மூவருடனும் நாங்கள் பேச்சு நடத்தியிருக்கின்றோம். 11

## துன்பங்களுக்கு விடை தேட சங்குக்கே வாக்களிப்போம்!

### காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் நேற்றுக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 17

தியாகி திலீபனின், நினைவுவாரத்தில், தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்களுக்கு, தமிழ் பொதுவேட்பாளர் ஊடாக பதிலடி கொடுப்போம் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தியாகி திலீபனின் நினைவேந்தல் வாரத்தில், தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்களுக்கு பதிலடி கொடுக்கும் தருணம் கிட்டியுள்ளதாக, 11

## ஊரடங்கை அமுலாக்கும் திட்டம் இப்போது இல்லை

கொழும்பு, செப். 17

தேர்தல் தினத்தன்று ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தும் திட்டம் தற்போதைக்கு இல்லை என்றும் சகல பாதுகாப்பு நடவடிக்கைகளும் அமுலில் உள்ளதாகவும், தேவைப்பட்டால் ஆயுதப்படைகள் தயார் நிலையில் இருப்பதாகவும் பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தேர்தல் காலத்தில் பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பார்கள் எனவும் தேவைப்பட்டால் பொலிஸாருக்கு ஆதரவாக முப்படையினரும் தயார் நிலையில் உள்ளதாகவும் பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க தெரிவித்தார்.

இதேவேளை, ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தும் தீர்மானம் ஜனாதிபதியிடம் 11



வரலாற்று பிரசித்தி பெற்ற துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் நேற்று தேர்த் திருவிழா நடந்த தருணம்...!

## ஜனாதிபதியானால் வேதனமின்றி மக்களுக்கு சேவையாற்றுவேன்!

### சஜித் பிரேமதாஸ உறுதிமொழி

கொழும்பு, செப். 17

தாம் ஜனாதிபதியாகத் தெரிவானதன் பின்னர், வேதனமின்றி மக்களுக்காகச் சேவையாற்றவுள்ளதாக ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டார்.


எந்தவித சந்தேகமுமின்றி, ஐக்கிய மக்கள் கூட்டணி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியைப் பதிவு செய்யும் என அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- 11



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





பிரசித்தி பெற்ற தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் பெருந்திருவிழாவில் தீர்த்தத் திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றவேளை....!

படங்கள் - ஐ. சிவசாந்தன்

# மந்துவில் படுகொலையின் 25 ஆம் ஆண்டு நினைவேந்தல்



முல்லைத்தீவு, செப். 17

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு, மந்துவில் படுகொலையின் 25ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன் தினம் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப் பட்டது.

கடந்த 1999ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15ஆம் திகதியன்று மந்துவில் சந்திப் பகுதியில் விமானப் படையினரின் விமான தாக்குதலில் 24 அப்பாவி தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களின் 24ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தாய்த் தமிழ் பேரவை அமைப்பின், தாய்த்தமிழ் நினைவேந்தல் குழுவால் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற மந்துவில் சந்தி வளாகத்தில் இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

பொதுச்சுடர் ஏற்றப்பட்டு இந்த நினைவேந்தல் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. இந்த படுகொலைச் சம்பவத்தின்போது உயிரிழந்தவர்களின் உறவுகள் பொதுச் சுடரை ஏற்றி, நிகழ்வேந்தல் நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

தொடர்ந்து குறித்த படுகொலைச் சம்பவத்தின்போது உயிர்நீத்தவர்களின் திருவுருவப் படங்களுக்கு உயிர்நீத்தவர்களின் உறவுகள் மலர்மாலை அணிவித்து, ஈகச்சுடேரேற்றி, மலர்தூவி, கண்ணீர் சொரிந்து உணர்வெழுச்சியுடன் தமது அஞ்சலிகளைச் செலுத்தியிருந்தனர்.

மேலும், இந்த அஞ்சலி நிகழ்வுகளில் தாய்த்தமிழ் பேரவை அமைப்பின் ஸ்தாபகர் எஸ். சத்தியரூபன், தாய்த் தமிழ் பேரவை அமைப்பு நிர்வாகிகள் உயிர்நீத்தவர்களின் உறவுகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத் தக்கது. (அ)

# தேசிய மக்கள் சக்தியை கண்டு ரணில்-சஜித் பிரேமதாஸ அச்சம்!

## ரில்வின் சில்வா கூறுகிறார்

கொழும்பு, செப். 17

தோல்விக்கு அஞ்சும் ரணில் விக்கிரமசிங்கவும் சஜித் பிரேமதாஸவும் தேர்தல் மேடைகளில் தேசிய மக்கள் சக்திக்கு சேறுபூசும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் தோல்விக்கு அஞ்சும் ரணில் விக்ரமசிங்கவும் சஜித் பிரேமதாஸவும் இன்று தேர்தல் மேடைகளில் தேசிய மக்கள் சக்திக்கு சேறுபூசும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

நாட்டு மக்கள் இன்று தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளனர். எனவே தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வெற்றியை எவராலும் தடுக்க முடியாது.

கள்வர்கள் இன்று கூட்டணியாக தேர்தலில் போட்டியிடுகின்றனர். நாட்டின் கொள்ளையர்கள் இரண்டாக பிரிந்து தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுடனும் சஜித் பிரேமதாஸவுடனும் இணைந்துள்ளனர்.

ஐக்கிய தேசியக்கட்சி இரண்டாக பிரிந்துள்ளது. ஒரு புறம் ரணில் விக்கிரமசிங்க மறுபுறம் சஜித் பிரேமதாஸ தேர்தலில் முன்னிலையாகியுள்ளனர்.

மொட்டுத் தரப்பினர் இரண்டாக பிளவடைந்து ரணிலுடனும் சஜித்துடனும் இணைந்துள்ளனர். தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் ஊழல் மோசடிகளுக்கும் ஊழல்வாதிகளுக்கும் இடமில்லை-என்றார். (அ)

# தேர்தல் குறித்து விசேட கூட்டம்

கொழும்பு, செப். 17

ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர்களுக்கும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளின் தலைவர்களுக்கும் இடையில் இன்று ராஜகிரியவில் விசேட கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

சுதந்திர தேர்தல்களுக்கான ஆசிய வலையமைப்பு மற்றும் பொதுநலவாய நாடுகளின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் இந்த கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளனர்.

இதனிடையே வாக்குப்பதிவு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளும் தயார் செய்யப்பட்டுள்ளதாகவும் அரசு அதிகாரிகளுக்கு வழங்க வேண்டிய அனைத்து அறிவுரைகளும் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வருட ஜனாதிபதித் தேர்தலில் வழமையை விட மக்கள் ஆர்வத்துடன் வாக்களிப்பார்கள் என நம்புகிறார் என்று தேர்தல்கள் ஆணையாளர் ரத்நாயக்க, அனைத்து மக்களையும் அதிகாலையிலேயே வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டார். (அ)

# துண்டுபிரசுரம் வாங்காத இளைஞன் மீது தாக்குதல்

கொழும்பு, செப். 17

ஐக்கிய மக்கள் சக்தியின் துண்டுப் பிரசுரத்தை ஏற்க மறுத்த அநுரவின் ஆதரவாளர்மீது ஐக்கிய மக்கள் சக்தியின் நாவலப்பிட்டி தொகுதி அமைப்பாளர் ஒருவர் தாக்குதல் நடத்திய காணொலி ஒன்று கடையில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு சி. சி. ரீ. வி. கமெராவில் பதிவாகியுள்ளது.

நாவலப்பிட்டி நகர மையத்தில் உள்ள மணிக்கூடு பழுதுபார்க்கும் கடையின் உரிமையாளரின் மகனே தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் வெற்றிக்காக அக்கட்சியின் நாவலப்பிட்டி தொகுதி அமைப்பாளர் உள்ளிட்ட ஆதரவாளர்கள் அப்பகுதியில் உள்ள கடைகளுக்கு துண்டுபிரசுரங்களை விநியோகித்துள்ளனர்.

இதன்போது கடைக்கு வந்து இளைஞனிடம் துண்டுப் பிரசுரம் ஒன்றை வழங்கியுள்ளார்.

குறித்த இளைஞன் துண்டுப்பிரசுரத்தை பெற்றுக் கொள்ள மறுத்ததால் கோபமடைந்த ஏற்பாட்டாளர், பின்னர் அந்த இளைஞனை தாக்கியதும், பின்னர் அவரது கையைப் பிடித்து அச்சுறுத்தியதும் பாதுகாப்பு சி. சி. ரீ. வி. கமெராவில் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இளைஞனைத் தாக்கியதையடுத்து, அந்த கட்சியின் ஆதரவாளர்கள் அமைப்பாளருடன் வந்து தேர்தலில் "உங்களை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்" என்று கூறி அந்த இளைஞனை மிரட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலின் பின்னர் குறித்த இளைஞன் நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று தனது எதிர்கால பாதுகாப்புக்காக அந்த வைத்தியசாலையில் பொலிஸில் முறைப்பாடு செய்து நேற்று வைத்தியசாலையில் இருந்து வெளியேறியுள்ளார். (அ)

வெல்க தமிழ்
சங்கு எங்கள் சின்னம்
எமது அரசியல் அபிலாஷைகள்
ஒரே குரலாய் ஓங்கி ஒலித்திட
கட்சிகளைக் கடந்து
தமிழ் இனமாகச் சிந்திப்போம்!

எங்களிடம்
இருக்கும்
ஜனநாயக ஆயுதம்
வாக்குகள்தான்
இம்முறையாவது
இலக்குத் தவறாது
பிரயோகிப்போம்

தமிழ்ப் பொது வேட்பாளர்
பா.அரியநேத்திரன்
தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
17.09.2024 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம், புரட்டாதி 01

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## மாவையின் இடம் என்ன?

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தமிழ்த் தேசிய அரசியலில் இருப்பவர்களில் மிகவும் அனுபவம் வாய்ந்த ஒருவர். தமிழ் அரசுக் கட்சிப் பாரம்பரியத்தில் வந்தவர்களில் தற்போது அந்தக் கட்சியில் எஞ்சியிருக்கும் பழுத்த அரசியல்வாதி. சீ. வீ. கே. சிவஞானம் போன்றவர்கள் தேர்தல் வெற்றிக்காக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்து தமிழ் அரசு பக்கம் தாவியவர்கள். அவரைப் போன்றவர்களை தமிழ் அரசு கட்சியின் அசல் குரலாக நோக்க முடியாது.

மாவை தமிழ்த் தேசிய அரசியலுக்காக பல துயரங்களை அனுபவித்தவர் - சிறையும் சென்றவர். அவரோடு ஒப்பிட்டால் பல தியாகங்கள் செய்தவர்கள் என்று கூறக்கூடிய எவருமே தமிழ் அரசு கட்சியில் தற்போது இல்லை. ஆனால், இவ்வாறான அரசியல் பின்புலம் கொண்டிருக்கும் மாவையின் தற்போதைய அரசியல் இடம் என்ன? அவர் எவ்வாறு மற்றவர்களால் நோக்கப்படுகின்றார்? தான் எவ்வாறு நோக்கப்படுகின்றேன் என்பது தொடர்பில் அவரிடம் தெளிவான புரிதலோ ஆகக்குறைந்தது அது பற்றிய கரிசனையாவது இருக்கின்றதா?

மாவை முடிவு எடுக்க வேண்டிய இடங்களில் முடிவெடுக்கும் தலைவராக தன்னை நிறுவுவதில் வெற்றிபெறவில்லை. ஆரம்பத்திலேயே அந்த இடத்தை விட்டுவிட்டார். இதன் காரணமாகவே தமிழ் அரசு கட்சியின் பாரம்பரியத்தில் வந்திராத - முந்தநாள் பெய்த மழைக்கு நேற்று முளைத்த காளான் போன்றவர்களின் இழுப்புக்கெல்லாம் இழுபடவேண்டிய நிலைக்கு கீழ்றங்கியிருக்கின்றார். "தலைவன் என்பவன் ஒரு சிங்கம் போன்று இருக்க வேண்டும் கூடவே, நரியாகவும் இருக்க வேண்டும்", என்பது மாக்கியவல்லியின் கூற்று. ஆனால், மாவையிடம் இப்படியான பண்புகள் மருந்துக்குக்கூட இல்லை. இதனால் இன்று பரிகசிப்புடன் நோக்கும் நிலைக்கு கீழிறங்கியிருக்கின்றார்.

மாவையின் எண்ணம் தமிழ்ப் பொது வேட்பாளரோடுதான் இருக்கின்றது. ஆனால், அதற்காக துணிந்து முடிவுகளை எடுக்கும் வல்லமையோடு அவர் இல்லை. கட்சி தீர்மானங்கள் என்பதெல்லாம் மக்களுக்காகத்தான். மக்களை பொருட்படுத்தாத - மக்களின் எதிர்காலத்தை கருத்தில் கொள்ளாத தீர்மானங்களின் பெறுமதி என்பது, குப்பைத் தொட்டியாகும். இன்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் மத்திய குழு என்னும் பெயரில் எடுக்கப்பட்டிருக்கும் தீர்மானம் குப்பைத் தொட்டிக்குரியதாகும். ஆனால், குப்பைத் தொட்டியை பூச்செண்டாகக் காண்பிக்கும் வேலைகளையே சுமந்திரன் அணியினர் முன்னெடுத்துவருகின்றனர். ஆனால், அதனை மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் மாவை தடுமாறிக் கொண்டிருக்கின்றார்.

ஓர் அரசியல் கட்சியின் தலைவர் என்பவர், தான் சரியென்று எண்ணும் ஒன்றை நியாயப்படுத்தவும் எவ்வாறான சோதனைகள் வந்தாலும் அதனை முன்கொண்டு செல்வதில் அர்ப்பணிப்புடனும் உறுதியுடனும் இருக்க வேண்டும். ஆனால், மாவையிடம் அவ்வாறான பண்புகள் எதனையும் காணவில்லை. வவுனியாவில் கட்சியின் தீர்மானத்தோடு இருக்கவேண்டும் என்கின்றார். ஆனால், யாழ்ப்பாணத்தில் தமிழ்ப் பொது வேட்பாளர் அலுவலகத்தில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பினருடன் கலந்துரையாடுகின்றார். கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருப்பதாகக் கூறப்படும் வேட்பாளர் அரியநேத்திரனோடு ஒன்றாக இருக்கின்றார். இன்னொருபுறம் ரணில் வெல்ல வேண்டும் என்கின்றார். இப்போது மாவை என்பவர் யார்?

இப்போதும் காலம் கடந்துவிடவில்லை. தமிழ்த் தேசிய அரசியல் வரலாற்றில் தனக்குத்தானே சகதிகளை பூசிக்கொண்ட ஒரு மூத்த அரசியல்வாதி என்னும் பெயரை இல்லாமல் செய்வதற்கான காலம் இப்போதும் உண்டு. எதிர்வரும் 18ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள தமிழ்ப் பொது வேட்பாளருக்கான இறுதிக் கூட்டத்தில் மாவை பகிரங்கமாக மேடையேறுவதன் மூலம் தனது கட்சியின் வரலாற்றுத் தவறை சரிசெய்ய முடியும். மாவை செய்வாரா? மாவையின் தமிழ்த் தேசிய அரசியல் வாழ்வு ஊசலாடுகின்றது. சகதிக்குள் சகதியாவதா - அல்லது வரலாற்றில் நிமிர்ந்த நடையுடன் செல்வதா - முடிவு மாவையிடம்.

# ஒவ்வொரு புள்ளடியும் உங்கள் தலையெழுத்தை தீர்மானிக்கும்

## தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரன்

திருமலை, செப். 17

ஜனாதிபதித் தேர்தலில் வாக்கு கேட்கும் வேட்பாளர்கள் எமது திருகோணமலை மண்ணை பறித்தவர்களே என தமிழ் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.

அரியநேந்திரனுக்கு அளிக்கும் வாக்குகள் எனக்கல்ல, அது உங்களுக்கானது. ஒவ்வொரு புள்ளடியும் உங்கள் தலையெழுத்தை தீர்மானிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

திருகோணமலை வெலிக்கடை தியாகிகள் கடற்கரை அருகில் நடைபெற்ற தேர்தல் பரப்புரை கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது ரணில், அநுர, சஜித் போன்றவர்களின் ஆசனத்தை பெறுவதற்கல்ல. சமஷ்டி தீர்வு கோரியும் 75 வருட கால பிரச்னைக்கான தீர்வுகளை முன்வைத்துமே ஆகும்.

திருகோணமலை மண்ணுக்கு பல வரலாறுகள் உண்டு. இலங்கைக்கு சுதந்திர தினத்தன்று சிங்கக் கொடிக்கு பதிலாக கறுப்புக்கொடி ஏற்றிய 22 வயது இளைஞன் நடராசா சுட்டுக் கொல்லப்பட்டார்.

1956இல் இலங்கை தமிழ் அரசு கட்சியின் மாநாடு தந்தை செல்வாவினால் இங்கு தான் நடத்தப்பட்டது. அதன்போது இணைந்த வட, கிழக்கின் தலைநகரமாக திருகோணமலையை அறிவித்திருந்தார்.

அப்போது கூட சமஷ்டியை வலியுறுத்தியே பேசியிருந்தார். 1977க்கு முன்பு பெரும்பான்மை இன பாராளுமன்ற உறுப்பினர் இருக்கவில்லை. 1977க்கு பின்பு சேருவில எனும் தொகுதியை உருவாக்கி சிறீ லங்கா சுதந்திர கட்சி சார்பில் லீலாரத்ன என்னும் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

2009 மே 18 இல் நடைபெற்ற போரின் போது நடந்த சம்பவம் பற்றி பல சர்வதேச நாடுகளுடனும் இந்தியாவுடனும் பேசியிருந்தோம். ஒன்றும் நடக்கவில்லை. இவ்வாறு ஒட்டுமொத்தமாக எல்லாவற்றையும் தடுத்தவர்களே வெட்கமில்லாமல் வாக்கு கேட்கின்றார்கள். அதற்கு சில தமிழ் தேசியத்தில் உள்ளவர்கள் சோரம் போகின்றார்கள்.

அரியநேந்திரனுக்கு அளிக்கும் வாக்குகள் எனக்கல்ல, அது உங்களுக்கானது. ஒவ்வொரு புள்ளடியும் உங்கள் தலையெழுத்தைத் தீர்மானிக்கும். சங்கு சின்னத்துக்கு மாத்திரம் வாக்களியுங்கள். ஏனையவர்களுக்கு வாக்களிக்க வேண்டாம். இன்னும் சில நாட்களில் பொய் வதந்திகள் வரலாம். அதனை நம்பி ஏமாற வேண்டாம். செயற்கை நுண்ணறிவு மூலமாக எனது படத்தை பயன்படுத்தி போலியான பிரசாரங்களை முன்வைத்து செயல்படுவார்கள். எதையும் நம்ப வேண்டாம்-என்றார். (அ)

# ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு 60,000 பொலிஸார் கடமையில்!

கொழும்பு, செப். 17

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு 60 ஆயிரம் பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு பொதுமக்கள் பாதுகாப்புக்காகவும் விசேட நடவடிக்கைகளுக்காகவும் 54 ஆயிரம் பொலிஸ் அதிகாரிகளை கடமையில் ஈடுபடுத்த முதலில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால், தற்போது அதன் எண்ணிக்கை 60 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், தேர்தல் நடவடிக்கைகளுக்காக பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

எதிர்வரும் நாட்களில் நாட்டின் நிலைமையைக் கருத்தில் கொண்டு கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ள பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படலாம்-என்றார். (அ)

# ஒக்ரோபர் முதல் ஈ-கடவுச்சீட்டு




கொழும்பு, செப். 17

புதிய ஈ-கடவுச்சீட்டை வழங்கும் பணி அடுத்த மாதம் 15 ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை ஆரம்பிக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அதன் முதற்கட்டமாக, சிப் அட்டைகள் இல்லாத வெளிநாட்டு கடவுச்சீட்டுகளை அமைச்சு வழங்கும். புதிய வெளிநாட்டு கடவுச்சீட்டை உருவாக்குவதற்கான அனுமதியை பெற குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டு ஆணையாளர் போலந்து சென்றுள்ளார்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்ரெம்பர் - 17 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம் - புரட்டாதி 01
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : சூன்ய




**மேடம்**
வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். இனிமையான நாள்.

**இடபம்**
பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத்திறமை வெளிப்படும்.

**மிதுனம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். பணவரவு திருப்தி தரும். த்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது சிக்குவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் விரயம் வரும்.

**சிம்மம்**
சவாலாக தெரிந்த சில வேலைகள் சாதாரணமாக முடியும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவுக் கிட்டும். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கன்னி**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**துலாம்**
பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். புதுமை படைக்கும் நாள்.

**விருட்சிகம்**
அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**தனுசு**
உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள்.

**மகரம்**
இதுவரை இருந்த காரியத்தடை நீங்கி குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் லாபம் வரும். புது வாய்ப்புகள் தேடி வரும். மகிழ்ச்சியான நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகளையும் நீங்களே பார்க்க வேண்டி வரும். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**மீனம்**
சின்ன சின்ன வேலைகளையும் அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். வாகனத்தில் அதிக கவனம் தேவை. பொறுமைத் தேவைப்படும் நாள்.

# தி. மு. கவுக்கு வரும் இடையூறுகளை தடுக்கும் போர்வாளாக ம. தி. மு. க.

## பொதுச்செயலாளர் வைகோ திட்டவட்டம்

சென்னை, செப். 17

தி. மு. க. ஆட்சிக்கும், கட்சிக்கும் எந்த இடையூறு வந்தாலும் அதைத் தடுக்கும் போர்வாளாக ம. தி. மு. க. இயங்கும் என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தவை வருமாறு, தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலினின் மதிப்பு அதிகரித்துள்ளது. இதனாலே திராவிட இயக்கத்துக்கு தற்போது ஆபத்து வந்து கொண்டிருக்கிறது. திராவிட இயக்கத்தை சாய்த்து விடலாம் என்று இந்துத்துவா சக்திகள் முயற்சிக்கின்றன. இந்த நேரத்தில் ம. தி. மு. க. தனது முழுபலத்தை தி. மு. கவுக்கு தொடர்ந்து வழங்கும்.

தி. மு. க. ஆட்சிக்கும், கட்சிக்கும் எந்த இடையூறு வருவதாக இருந்தாலும், அதைத் தடுக்கும் போர்வாளாக ம. தி. மு. க. இயங்கும். ஜனநாயகத்தில் ஒவ்வொரு கட்சிக்கும் அவர்களது கருத்துகளை சொல்ல உரிமை உள்ளது. தமிழகத்தில் மதுவை எதிர்த்து ம. தி. மு. க. போராடியதுபோல் வேறு எந்தக் கட்சியும் கிடையாது. மதுவை ஒழிக்க எல்லோரும் முன்வர வேண்டும். அதற்கு முன்னுரிமை எடுத்துக் கொள்ளக்கூடிய தகுதி ம. தி. மு. கவுக்கு உண்டு- என்றார்.

(எ)


# தி. மு. க. பவளவிழா இலட்சினையை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, செப். 17


தி. மு. க. பவளவிழா இலட்சினையை சென்னை அண்ணா அறிவாலயம் முகப்பு பகுதியில் முதல்வர் மு. க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.

தி. மு. க. சார்பில் ஆண்டு தோறும் அண்ணா பிறந்தநாள், தி. மு. க. உருவான நாள், பெரியார் பிறந்த நாள் என மூன்றையும் இணைத்து முப்பெரும் விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டு தி. மு. க. உருவாகி 75 ஆண்டுகள் ஆகும் நிலையில் பவள விழா கொண்டாடப்படுகிறது. இதன்படி பவள விழா உள்ளிட்ட முப்பெரும் விழா இன்று 17ஆம் திகதி சென்னை நந்தனத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், தி. மு. க. தலைமை அலுவலகமான சென்னை தேனாம்பேட்டை அண்ணா அறிவாலயம் முகப்பில் அண்ணா, கருணாநிதி, பெரியார் உருவம் பொறித்த பவளவிழா இலட்சினையை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.




(எ)



விநாயகர் சதுர்த்தி விழா நிறைவடைந்ததையொட்டி சென்னையில் வைக்கப்பட்டிருந்த 1878 சிலைகள் ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டு கடலில் கரைக்கப்பட்டன.

# இந்தியாவிலேயே மோசமான சாதி கட்சி வி. சி. க. மட்டுமே!

சென்னை, செப். 17

இந்தியாவிலேயே மிக மோசமான சாதி கட்சி விடுதலை சிறுத்தைகள் கட்சி தான் என்று தமிழக பா. ஜ. க. ஒருங்கிணைப்புக் குழு தலைவர் எச். ராஜா விமர்சித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் மோடி பிறந்தநாளை முன்னிட்டு சென்னையிலுள்ள கட்சி அலுவலகத்தில் பா. ஜ. க. சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. இதன்பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு, இந்துத்துவா கும்பல் திராவிட கட்சிகளை ஒழிக்க நினைக்கிறது என வைகோ கூறியிருக்கிறார். முதலில் ம. தி. மு. கவை ஒழித்தது யார் என்று அவர் சொல்லட்டும். இன்று ம. தி. மு. க. என்ற கட்சியே காணாமல் போயிருக்கிறது. எனவே, திராவிட கட்சிகளை நீங்களே அழித்துக் கொள்ளும்போது, எங்களுக்கு ஏன் வேலை இருக்க போகிறது.

இந்தியாவிலேயே மிக மோசமான சாதிக் கட்சி வி. சி. க. தான். ஆட்சியிலும் பங்கு அதிகாரத்திலும் பங்கு என்ற திருமாவளவனின் கோரிக்கை நியாயமானது. ஆட்சி அதிகாரத்தில் கூட்டணி கட்சிகளுக்கு பா. ஜ. க. பங்கு கொடுத்திருக்கிறது- என்றார்.

# ஆட்சி, அதிகாரத்தில் காங்கிரஸுக்கு பங்கு?



சென்னை, செப். 17

ஆட்சி, அதிகாரத்தில் பங்கு வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் தெரிவித்திருப்பது அவரது கட்சியின் கருத்து. காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை எந்தக் கொள்கை முடிவுகளாக இருந்தாலும் அதை அகில இந்திய காங்கிரஸ் தலைமை தான் எடுக்கும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் மாநில தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்தார்.

தமிழ்நாடு மகளிர் காங்கிரஸ் சார்பில் மகளிர் காங்கிரஸ் நிறுவன நாள் விழா, இணைய வழி மகளிர் உறுப்பினர் இணைப்பு மற்றும் அரசியலில் பெண்களின் பங்களிப்பு எனும் தலைப்பில் கருத்தரங்கு சென்னை சத்தியமூர்த்தி பவனில் நடைபெற்றது. இதன்பின்னர் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இராஜாங்க அமைச்சருடன் தகராறு

# உதவி பொலிஸ் அத்தியட்சகர் புத்தளம் பொலிஸாரால் கைது!

கொழும்பு, செப். 17

**இராஜாங்க நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களை திட்டியதாகவும் அமைச்சரின் மெய்ப்பாதுகாவலர்களை தாக்கியதாகவும் கூறப்படும் வாகன விபத்து தொடர்பில் புத்தளம் மாவட்டத்திலுள்ள உதவி பொலிஸ் அத்தியட்சகரை புத்தளம் பொலிஸார் சனிக்கிழமை கைது செய்துள்ளனர்.**

சம்பவத்தின்போது பொலிஸ் அதிகாரி மதுபோதையில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இராஜாங்க அமைச்சர் சேமசிங்க தனது குடும்ப உறுப்பினர்களுடன் புத்தளம்-கொழும்பு வீதியில் நிதியமைச்சின் ஜீப்பில் பயணித்துக் கொண்டிருந்த போது, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஓட்டிச் சென்ற காரை முந்திச் செல்ல முற்பட்டபோது, ஜீப் காருடன் சற்று மோதியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அப்போது போதையில் இருந்த உதவி பொலிஸ் அத்தியட்சகர், ஜீப் சாரதியை பிடித்து இழுத்துச் சென்றதாக பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது.

விபத்து நடந்தபோது, உதவி பொலிஸ் அத்தியட்சகர் சிவில் உடையில் இருந்தார். அவர் இராஜாங்க அமைச்சரையும் அவரது குடும்ப உறுப்பினர்களையும் துன்புறுத்தத் தொடங்கியதால், அமைச்சரின் பாதுகாப்பு அதிகாரிகள் இது குறித்து உயர் பொலிஸ் அதிகாரிகளுக்குத் தெரிவித்தனர்.

அதன்படி, சிறப்பு பொலிஸ் குழு சம்பவ இடத்திற்கு வந்து குடிபோதையில் இருந்த உதவி பொலிஸ் அத்தியட்சகரை கைது செய்ய நடவடிக்கை எடுத்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன்போது உதவி பொலிஸ் அத்தியட்சகர் குடிபோதையில் இருந்ததை புத்தளம் பொலிஸ் அதிகாரிகள் உறுதிப்படுத்தியதையடுத்து, அது தொடர்பில் பொலிஸ் தலைமையகத்திற்கு அறிவித்துள்ளனர்.

இந்த உதவி பொலிஸ் அத்தியட்சகர் பொலிஸ் பணியில் இருந்து விரைவில் ஓய்வு பெற உள்ள ஒரு அதிகாரி. இந்த அதிகாரி தொடர்பில் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு அறிவிக்க பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

(அ)

# புலமைப்பரிசில் பெறுபேறுகள் 40 நாட்களில் வெளியிடப்படும்

கொழும்பு, செப். 17

நேற்று முன் தினம் நடைபெற்ற ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் 40 நாட்களில் வெளியிடுவதற்கு எதிர்பார்ப்பதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இந்தாண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சையானது 2,849 நிலையங்களில் நடைபெற்றதுடன், 323,879 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அதிவேக நெடுஞ்சாலையில் மின்கம்பி வெட்டியவர் கைது!

கொழும்பு, செப். 17

அதிவேக நெடுஞ்சாலையின் பேலியகொடை வெளியேறும் பகுதிக்கு அருகில் நிலத்தடி மின் கம்பிகளை அறுத்துக் கொண்டிருந்த சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன் தினம் காலை கொழும்பு-கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் இரவு நேர ரோந்து பணியில் ஈடுபடும் அதிகாரிகளால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டு வத்தளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சந்தேக நபரிடம் இருந்து 14 அடி நீளமுள்ள இரண்டு செப்பு கேபிள்கள் மற்றும் கேபிள்களை வெட்டுவதற்கு பயன்படுத்தப்படும் ஆயுதங்கள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் களனி - வனவாசல பிரதேசத்தை சேர்ந்த 31 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராக அனுர மத்தேகொட

கொழும்பு, செப். 17

சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் பதவியிலிருந்து ஜனாதிபதி சட்டத்தரணி கௌசல்ய நவரத்ன பதவி விலகியதை அடுத்து அந்த சங்கத்தின் பதில் தலைவராக அனுர மத்தேகொட நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜப்பான் ஜெய்க்கா நிறுவனத்தின் நிதியுதவியுடன், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆலோசனை சேவை திட்டம் தொடர்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கௌசல்ய நவரத்ன நம்பிக்கை மோசடியில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் பதவியிலிருந்து ஜனாதிபதி சட்டத்தரணி கௌசல்ய நவரத்ன கடந்த 13 ஆம் திகதி பதவி விலகினார்.

# போதைப் பொருள் பாவனைக்கு அடிமையான பெண்களுக்காக விசேட புனர்வாழ்வு நிலையம்!

கொழும்பு, செப். 17

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான பெண்களுக்கு புனர்வாழ்வு வழங்கும் விதமாக விசேட நிலையமொன்றை நிறுவுவதற்கு புனர்வாழ்வு பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்தவகையில் வவுனியா பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள குறித்த புனர்வாழ்வு நிலையத்தில் 100 பெண்கள் வரை புனர்வாழ்வளிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக போதைக்கு அடிமையான பெண்களுக்கு இந்த நிலையம் ஊடாக மறுவாழ்வு அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுக்கு, இது தொடர்பில் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, போதைப்பொருளுக்கு அடிமையான பெண்களை வவுனியாவில் அமைந்துள்ள இந்த புதிய புனர்வாழ்வு நிலையத்துக்கு புனர்வாழ்வுக்காக பரிந்துரைக்குமாறு நீதிச் சேவை ஆணைக்குழு அனைத்து நீதிபதிகளுக்கும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# தேர்தல் பாதுகாப்புக் கடமைகளுக்காக வவுனியாவில் 1,500 பொலிஸார் குவிப்பு!

வவுனியா, செப். 17

வவுனியாவில் ஜனாதிபதித் தேர்தல் கடமைகளுக்காக 1,500 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் பி.எ.சரத்சந்திர தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் தேர்தல் தினத்தில் நடந்துகொள்ளவேண்டிய முறைமைகள் தொடர்பாக வேட்பாளர்களின் முகவர்கள், பொலிஸார் தேர்தல் கண்காணிப்பாளர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட ஏனையதரப்புக்களுக்கு தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் 152 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் 12 வாக்கெண்ணும் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளது. வாக்கெண்ணும் மத்தியநிலையமாக வவுனியா சைவப்பிரகாசா மகளிர் கல்லூரி செயற்படவுள்ளதுடன் அதற்கான உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதைவேளை தேர்தல் கடமைகளுக்காக 1500 இற்கும் மேற்பட்ட பொலிஸார் வவுனியா மாவட்டத்தில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தேர்தல் கடமைகளில் ஈடுபடுபவர்களுக்கான போக்குவரத்து ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன-என்றார்.

# கூரிய ஆயுதத்தால் தாக்கி நபரொருவர் படுகொலை!

கொழும்பு, செப். 17

வெயங்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வதுரவ விகாரைக்கு அருகில் கூரிய ஆயுதத்தால் தாக்கி நபரொருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த நபர் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில், வத்துபிட்டிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் 49 வயதுடைய வதுரவ-வெயங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இரு நபர்களுக்கு இடையில் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுத்து வருவதாக வெயங்கொட பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிப்பு!

கொழும்பு, செப். 17

இந்த மாதத்தின் முதல் 11 நாட்களில் மாத்திரம் 44 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குள் பிரவேசித்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. இந்த காலப்பகுதியில் 44,977 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை கூறியுள்ளது.

இந்தியாவிலிருந்தே அதிகளவான சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதுடன், பிரித்தானியா, ஜேர்மனி, சீனா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்தும் சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்குப் பிரவேசித்துள்ளதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(அ)

### பிரசாரங்கள் நிறைவடைந்த பின்னர்

# சமூக வலைத்தளங்களூடாக நடக்கும் பிரசாரத்தை தடுக்க வேலைத்திட்டம்!

கொழும்பு, செப். 17

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்கள் நிறைவடைந்ததன் பின்னர் சமூக வலைதளங்களூடாக மேற்கொள்ளப்படும் பிரசாரங்களைத் தடுப்பதற்கு விசேட வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அமைதியான காலத்தில் எந்த பிரசாரமும் செய்யக்கூடாது என்பதை சட்டம் உறுதி செய்வதாகவும், ஆனால், சிலர் சமூக வலைத்தளங்களை பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் ஜனாதிபதி வேட்பாளர்களை விளம்பரப்படுத்துவதாக தகவல் கிடைத்துள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க குறிப்பிட்டார்.

எனவே, அமைதியான காலப் பகுதியில் சமூக ஊடக பிரசாரங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்படுவது என்பது குறித்து சம்பந்தப்பட்ட சர்வதேச நிறுவனங்களுடன் கலந்துரையாடியதாக தலைவர் குறிப்பிட்டார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்!

## தேசிய மக்கள் கட்சி வேண்டுகோள்

கொழும்பு, செப். 17

**ஊழல்வாதிகள் அங்கம் வகிக்கும் அரசியல் முகாம்களை இல்லாதொழிக்க மக்கள் தயாராக வேண்டும் என தேசிய மக்கள் கட்சியின் தலைவர் மஞ்சு நிசங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாடு சுதந்திரமடைந்தது முதல் குழுக்கள் குழுக்களாக இணைந்து மாறி மாறி ஆட்சியாளர்கள் ஆட்சிசெய்து வந்தனர். அவர்களைப் பற்றி நோக்கும்போது அதிகார மோகமே அதிகமாகக் காணப்பட்டது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் நாம் போட்டியிடவில்லை. எனினும் அடுத்து வரும் அனைத்து தேர்தல்களிலும் போட்டியிடுவோம்.

ஊழல்வாதிகளும் திருடர்களும் மோசடிக்காரர்களும் குழுக்களாக இணைந்திருக்கிறார்கள். இந்த நாட்டை பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளியோர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கூட்டு சேர்ந்திருக்கிறார்கள். நாட்டை வங்குரோத்தடையச் செய்த ராஜபக்ஷ முகாமிலும் திருடர்களே இருக்கிறார்கள்.

நாட்டில் முறைமை மாற்றம் அவசியம் என்பதே காலிமுகத் திடல் போராட்டக்காரர்களின் கோரிக்கையாக இருந்தது. அவ்வாறாயின் இந்த இரு தரப்பினரும் அரசியலிலிருந்து ஓரங்கட்டப்பட வேண்டும். அதற்காக மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டியது அவசியமாகும்- என்றார். (அ)

## சரவணபவனை நேற்றுச் சந்தித்து கலந்துரையாடிய அரியநேத்திரன்

யாழ்ப்பாணம், செப். 17

இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக் கிளை தலைவரும் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவனை, தமிழ் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரன் சந்தித்து கலந் துரையாடியுள்ளார்.

இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக்கிளை தமிழ் பொதுவேட்பாளருக்கு ஆதரவு தெரிவிப்பதாக நேற்று முன் தினம் அறிவித்தது.

அதனைத் தொடர்ந்தே ஜனாதிபதி தமிழ் பொதுவேட்பாளர் வேட்பாளர் இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக்கிளை தலைவரும் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவனை கோப்பாயில் அமைந்துள்ள அவரது வாசஸ்தலத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். (அ)

## வேட்பாளர் திலகராஜ் நேற்று யாழ்ப்பாணத்தில் பிரசாரம்

யாழ்ப்பாணம், செப். 17

ஜனாதிபதி வேட்பாளர் மயில்வாகனம் திலகராஜ், நேற்று யாழ்ப்பாணத்தில் பிரசாரத்தில் ஈடுபட்டதுடன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பு, அவரது இல்லத்தில் இடம்பெற்றது.

இதன் போது, மயில்வாகனம் திலகராஜ், தனது தேர்தல் விஞ்ஞாபனத்தையும் கையளித்துள்ளார். (அ)

## நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை நம்பி, தமிழர்களின் வாக்கை ஈடு வைக்க முடியாது

### சுரேஸ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப். 17

நிறைவேற்றதிகார ஜனாதிபதியை நம்பி, தமிழ் மக்களின் தீர்வு விடயங்களுக்கு வாக்குறுதியளிக்க முடியாது என ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்றப் பலம் எவ்வாறு அமையும் என்பதை கருத்திற்கொள்ளாது, வெறுமனே நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஒருவரை நம்பி வாக்குறுதிகளை



வழங்க முடியாது என அவர் கூறினார்.

தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பின் யாழ்ப்பாண அலுவலகத்தில், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

## நீதியான அரசியல் தீர்வு வேண்டும் சங்கை வெற்றி பெறச் செய்வோம்

### சட்டத்தரணி என்.சிறிகாந்தா கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 17

தமிழ் மக்களுக்கு, நீதியான அரசியல் தீர்வுத்திட்டம் வேண்டும் என்பதை, ஜனாதிபதித் தேர்தலின் ஊடாக உலகுக்கு எடுத்துக் காட்ட வேண்டும் என தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய பொது கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் பா.அரியநேத்திரனை ஆதரித்து யாழ்ப்பணாம் - ஊர்காவற்துறை பகுதியில் தேர்தல் பரப்புரை கூட்டம் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றது.

அகில இலங்கை மீனவர் மக்கள் தொழிற்சங்க வடமாகாண இணைப்பாளர் அன்னலிங்கம் அன்னராசா தலைமையில் இடம்பெற்ற குறித்த பரப்புரை கூட்டத்தில், தமிழ் பொதுக்கட்டமைப்பைச் சேர்ந்த தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா, அரசியல் ஆய்வாளர் ம.நிலாந்தன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றியிருந்தனர்.

இதன்போது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு சங்கு சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டுமென தெரிவித்தனர். (அ)

## நாட்டை பிளவுபடுத்த நாம் இடமளிக்கப்போவதில்லை

### மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, செப். 17

தேசியம், பௌத்தம் பற்றி நாமல் ராஜபக்ஷ மாத்திரமே பேசுகிறார் எனவும் எந்த காரணிகளுக்காவும் நாட்டை பிளவுபடுத்த நாங்கள் இடமளிக்க போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டின் தேசிய பாதுகாப்பையும், ஒருமைப்பாட்டையும் நான் உறுதிப்படுத்தினேன்.

அபிவிருத்தியை துரிதமாக மேற்கொண்டு தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்தினேன்.

2005 ஆம் ஆண்டு அரசாங்கத்தை பொறுப்பேற்கும் போது பொருளாதார நிலைமை 15 பில்லியன் டொலர்களாக காணப்பட்டது.

2014 ஆம் ஆண்டு 85 பில்லியன் டொலர் கையிருப்புடன் அரசாங்கத்தை ஒப்படைத்தேன்.

ஊழலை முடிவுக்கு கொண்டு வருவதாக குறிப்பிட்டுக் கொண்டு 2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் தேசிய பொருளாதாரத்தையும், தேசிய பாதுகாப்பையும் பலவீனப்படுத்தியது.

2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எம்மை ஊழல்வாதிகளாக சித்தரித்து அதிகாரத்தை கோரியவர்கள் ,ந்த முறையும் அதிகாரத்தை கோருகிறார்கள். வெறுப்பினை முன்னிலைப்படுத்தி செயற்படும் இவர்களால் பொருளாதாரத்தை ஒருபோதும் மேம்படுத்த முடியாது.

சூழ்ச்சிகளினால் தான் நாங்கள் 2015 ஆம் ஆண்டு தோற்கடிக்கப்பட்டோம். அந்த சூழ்ச்சி இன்றும் தொடர்கிறது.

ஜனாதிபதித் தேர்தல் பிரசார மேடைகளில் நாமல் ராஜபக்ஷவை தவிர்த்து எவரும் தேசியம்



மற்றும் பௌத்தம் பற்றி பேசுவதில்லை.

நாட்டை பிளவுப்படுத்தும் புதிய அரசியலமைப்பு பற்றி பேசுகிறார்கள்.

எந்த காரணிகளுக்காகவும் நாட்டை பிளவுபடுத்த நாங்கள் இடமளிக்கமாட்டோம். தேசியத்தை பாதுகாப்பதற்கு அனைவரும் எம்முடன் கைகோர்க்க வேண்டும். பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் நிச்சயம் தோற்றம் பெறும் என்பதை உறுதியாக குறிப்பிடுகிறேன்-என்றார். (அ)

## ஊழலை உண்மையாக கையாள்வதற்கு தலைவர்கள் எவரும் தயாராக இல்லை!

### விஜயதாஸ ராஜபக்ஷ சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 17

இலங்கையில் ஊழலை உண்மையாக கையாள்வதற்கு தலைவர்கள் எவரும் தயாராக இல்லை என ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாஸ ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

இலங்கை அமைச்சர் ஒருவர் இலஞ்சம் கோரினார் என ஜப்பான் குற்றம் சாட்டியதாகவும் ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாஸ ராஜபக்ஸ தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் அரசாங்கத்தில் இருந்தபோது, ஜப்பானிடம் குறித்த அமைச்சர் இலஞ்சம் கோரியதாக விஜயதாச ராஜபக்ஸ, தெரிவித்துள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் காரணமாகவே கோட்டாபய ராஜபக்ச, குறித்த அமைச்சரை பதவி நீக்கியதாகவும் அவர் தற்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அமைச்சரவையில் அமைச்சராக இருப்பதாகவும் விஜயதாஸ ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

1977ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் ஊழலை உண்மையாக கையாள்வதற்கு தலைவர்கள் எவரும் தயாராக இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

## சஜித்துக்கு வாக்களித்து நாங்கள் கண்டது என்ன?

### கேட்கிறார் இளம்பிறையன்

யாழ்ப்பாணம், செப். 17

கடந்த ஜனாதிபதித் தேர்தலில், சஜித் பிரேமதாஸவை நம்பி தமிழ் மக்கள் வாக்களித்து, அதனால் என்ன நன்மைகளைப் பெற்றுக்கொண்டனர் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் மாணிக்கவாசகர் இளம்பிறையன் கேள்வியை முடிப்பியுள்ளார்.

தமிழ் பொதுக்கட்டமைப்பின், யாழ்ப்பாண அலுவலகத்தில், நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (அ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடியான காலத்தில் ஐ.தே.க. மாத்திரமே எனக்கு ஆதரவளித்தது!

## ஜனாதிபதி வேட்பாளர் ரணில்

கொழும்பு, செப். 17

**நெருக்கடி காலத்தில் ஐக்கிய தேசிய கட்சி மாத்திரமே தனக்கு நூறு வீத ஆதரவை வழங்கியதாக சுயேட்சை வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



கந்தளையில் நேற்று இடம்பெற்ற " இயலும் சிறீ லங்கா" தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடு நெருக்கடியில் இருந்த தருணத்தில் ஏற்றுக்கொள்ளாத தரப்பினர் தற்போது நாட்டை தம்மிடம் கையளிக்குமாறு கோருகின்றனர். அதுவும் காகம் கரைவதை போன்று எம்மிடம் கையளியுங்கள் எம்மிடம் கையளியுங்கள் என 38 வேட்பாளர்களும் கோருகின்றனர்.

நாடு வீழ்ச்சி கண்டு இருந்த தருணத்தில் ஆட்சியமைக்க ஒத்துழைப்பு வழங்குமாறு கோரிய தருணத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான சிறீலங்கா பொதுஜன பெரமுனவினர் மாத்திரமே முன்வந்தனர். அதற்காக அவர்களுக்கு என்னுடைய நன்றிகளை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அத்துடன், என்னுடைய பாராளுமன்ற பதவியை வஜிர அபேவர்த்தனவுக்கு வழங்கினேன். அந்த வகையில் ஐக்கிய தேசிய கட்சி மாத்திரமே எனக்கு நூறு வீத ஆதரவை வழங்கியது. இவ்வாறாக ஆட்சியமைத்த சந்தர்ப்பத்தில் ராஜபக்ஷ அரசாங்கம் என விமர்சித்தனர்.

ராஜபக்ஷ அரசாங்கம் என்றால் ராஜபக்ஷர்கள் இந்த மேடையில் அமர்ந்திருக்க வேண்டும் அல்லவா ? அவர்களும் இல்லை சஜித்தும் இல்லை. நெருக்கடி காலத்தில் ராஜபக்ஷர்கள் எனக்கு உதவினர். அதற்கு நன்றி கூறுகின்றேன். என்னிடம் பெரும்பான்மை இல்லை. இருந்தபோதிலும் அவர்களின் ஆதரவு இருந்தமையினால் சர்வதேச நாணய நிதியத்தை நாடினோம்.அதன் .ஊடாக அடுத்த கட்ட நகர்வுகளை முன்னெடுக்க முடியுமாக இருந்தது-என்றார்.

(அ)

# ஐக்கிய மக்கள் சக்திக்கு எவருமே சவால் அல்லர்!

## லக்ஷ்மன் கிரியெல்ல

கொழும்பு, செப். 17

பிரதான அரசியல் கட்சிகள் இன்று பிளவடைந்துள்ளமையினால் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு எவரும் சவால் அல்லர் என பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து வேட்பாளராக முன்னிலையாதவதற்கு விரும்பாத காரணத்தினாலேயே ரணில் விக்ரமசிங்க சுயாதீன வேட்பாளராக களமிறங்கியுள்ளார்.

மொட்டுத் தரப்பினரும் அதேநிலையிலேயே உள்ளனர். சுயாதீனமாக தேர்தலில் முன்னிலையாகியுள்ளனர்.

சுதந்திரக்கட்சி நான்காக பிளவடைந்துள்ளது. தயாசிறி தரப்பு, மைத்திரிபால சிறிசேன தரப்பு, விஜயதாச ராஜபக்ஷ தரப்பு, நிமல் சிறிபால டீ சில்வா தரப்பு என 4 தரப்பினர் உள்ளனர்.

அரசியில் பிரதான கட்சிகள் பிளவடைந்துள்ளன. ஐக்கிய மக்கள் சக்தி மாத்திரமே பிளவடையாமல் தேர்தலில் முன்னிலையாகியுள்ளது.

எமது தரப்பில் இருந்தும் ஓரிருவர் சென்றாலும் கூட கட்சிக்கு அதனால் பாதிப்பு இல்லை. பிரதான கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளமையினால் எமது கட்சியின் வெற்றி உறுதியாகியுள்ளது.

பிரதான கட்சிகள் பிளவடைந்துள்ளமையினால் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு எந்த தரப்பினரும் சவால் அல்லர்.இந்த நிலையிலேயே தேசிய மக்கள் சக்தியினர் தங்களை ஐக்கிய மக்கள் சக்திக்கு சவாலாக கருதுகின்றனர்.

சஜித் பிரேமதாசவை அநுர குமார தோற்கடிப்பார் என ஜனாதிபதி கூறுகின்றார். தேர்தலில் தாம் வெற்றியடைவதை விடுத்து சஜித் பிரேமதாசவை தோற்கடிப்பதே ஜனாதிபதியின் திட்டமாகும்-என்றார்.

(அ)

# சஜித் என்னுடன் இணையமுடியும்

## அழைக்கிறார் ரணில்



கொழும்பு, செப். 17

சஜித் பிரேமதாஸவை தன்னுடன் இணையுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

நாட்டுக்குத் தேவை நடைமுறைக்கு சாத்தியமான வேலைத் திட்டமே தவிர மாற்றம் அல்லவென ஜனாதிபதி வேட்பாளர் ரணில் கூறினார்.

கண்டியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி போட்டியிலிருந்து நான் விலகப் போவதாக ஐக்கிய மக்கள் சக்தி பொய் பிரசாரம் செய்து வருகிறது. நான் சஜித் மற்றும் அநுரவைப் போன்று இராஜினாமா செய்யும் அல்லது ஓடிப்போகும் நபரல்லர்.

பின்வாங்கி ஓடிச் செல்லாது துணிச்சலோடு முன்நோக்கிப் பயணிக்கும் பாடத்தை மட்டுமே சஜித்துக்கு கற்பிக்க முடியாமல் போனது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன், மக்கள் தேர்தல் நடத்தக் கேட்கவில்லை. தேர்தலொன்றை நடத்த முடியும் என்று மக்கள் நினைத்திருக்கவில்லை. ஆனால் இன்று மக்கள் பணம் சம்பாதிக்கின்றனர்.

இந்த நீண்ட வார இறுதியில் கண்டி, நுவரெலியா, பண்டாரவளை ஆகிய பகுதிகளுக்கு வந்துள்ள மக்களைப் பார்க்கும் போது, நாடு அடைந்துள்ள பொருளாதார முன்னேற்றத்தைக் காணலாம்.

அரசியல்வாதிகள் ஏன் சாதாரண மக்களை கைவிட்டார்கள் என அநுரகுமார கேட்கிறார். தொழிலாளர் வர்க்கத்தைப் பற்றி இவ்வளவு கவலை இருந்தால், பொருளாதார நெருக்கடியில் ஏன் அவர் நாட்டை ஏற்கவில்லை. நான் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பிய பிறகு, இப்போது நாட்டின் பொறுப்பை கேட்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள அனைவரையும் என்னுடன் இணையுமாறு கேட்டுக் கொள்கின்றேன். சஜித் பிரேமதாசாவுக்கும் அழைப்பு விடுக்கிறேன்-என்றார்.

(அ)

# வடக்கு மக்களின் பிரச்னைகளை பற்றி பிரதான வேட்பாளர்கள் பேசுவதில்லை

## நுவான் போபகே சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப். 17

வடக்கு மக்களின் பிரச்னைகள் பற்றி பிரதான வேட்பாளர்கள் பேசுவதில்லை என ஜனாதிபதி வேட்பாளர் நுவான் போபகே தெரிவித்துள்ளார்.

புத்தூர் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அனுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்துக்கு வந்து கூறுகின்றார் தெற்கில் உள்ள மக்கள் அனைவரும் தன்னை வெற்றி பெற வைக்க தயாராக உள்ளனர் என்று.

யாழ்ப்பாண மக்களும் வெற்றிக்கான மாற்றத்தில் இணைந்து கொள்ள வேண்டும் என்று அவர் ஒரு தொனியில் கூறிவிட்டு சென்றிருக்கின்றார்.

வரலாற்றைப் போலவே வடக்கில் உள்ள மக்கள் நிர்பந்திக்கப் படுகின்றார்கள்.

தெற்கில் எடுத்த முடிவுகளில் வடக்கு மக்களும் ஒத்து செல்ல வேண்டும் என அவர் கூறிவிட்டு சென்றிருக்கின்றார்.

இவர்கள் வடக்கு மக்களின் பிரச்னைகள் பற்றி பேசுவதில்லை.

21 ஆம் திகதி அந்த புள்ளடியினை பெறுவதற்கு மட்டுமே யாழ்ப்பாணத்திற்கு வந்து போகின்றார்கள்.

இந்த மூன்று வேட்பாளர்களையும் நீங்கள் எடுத்துக் கொண்டால், வரலாற்றுக் காலத்தில் செய்ததைத்தான் இந்த ஜனாதிபதி தேர்தல் காலத்திலும் செய்கின்றார்கள்.

அவ்வாறான நிலையில் வடக்கிலுள்ள மக்களுக்கு முன்னால் நாங்கள் கூறிக்கொள்வது என்னவென்றால் இந்த ஜனாதிபதி தேர்தலில் நாங்கள் வெற்றி பெறாவிட்டாலும், மக்களுடைய பிரச்சினைகளை நாங்கள் இந்த சூழ்நிலையில் தான் தெரிவிக்க வேண்டும்.

பல தசாப்தங்களாக, தெற்கிலும் வடக்கிலும் போராடிய ஒவ்வொரு தோழர்களும், ஒன்றிணைந்து உருவாக்கிய வேலைத் திட்டத்தினோடு, நாங்கள் உங்கள் மத்தியில் வந்துள்ளோம்.

அந்த வகையில் மக்கள் போராட்ட முன்னணியின் கொள்கை வகுப்புகள், தேசிய இன பிரச்சனைக்கான தீர்வு ஒன்றினை, கண்ணியமான நியாயமான நீதியான ஒரு வாழ்க்கை முறையினை வாழ்வதற்கான ஒரு தீர்வு திட்டம்.

வரலாற்றுக் காலமும், நீங்கள் அளித்த வாக்குகளை விடுத்து ஒரு கொள்கை திட்டத்திற்கான எங்களுடன் பயணியுங்கள்-என்றார்.

(அ)

# மக்களைப் பாதுகாத்தவரிடமே நாட்டை ஒப்படைக்கவேண்டும்

கொழும்பு, செப். 17

நாட்டை மீட்டு மக்களை பாதுகாத்தவரிடம் இந்த நாட்டை ஒப்படைக்க வேண்டியது எமது கடமையாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

களுத்துறையில் இடம்பெற்ற அரசியல் கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தலில் பொதுமக்கள் சிலிண்டர் சின்னத்திற்கு வாக்களித்து ரணில் விக்கிரமசிங்கவை வெற்றியடையச் செய்வார்கள்.

தேர்தல் மேடைகளில் நாம் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற்பட்டவர்கள் அல்லர். நாம் மகிந்த ராஜபக்ஷ தரப்பினர்.

ஆனாலும் நாம் தற்போது ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்த நாட்டை மீண்டும் ஒப்படைக்க தீர்மானித்துள்ளோம். நாடு நெருக்கடியை எதிர்கொண்ட சந்தரப்பத்தில் நாட்டை பொறுப்பேற்குமாறு எதிர்க்கட்சி தலைவரிடம் கூறினோம்.

அவர் அதற்கு பின்வாங்கினார். நாட்டை பொறுப்பேற்கவில்லை. அதேபோல் அநுரகுமாரவுக்கு அழைப்பு விடுத்தோம் அவரும் நாட்டை பொறுப்பேற்க தயங்கினார்.

அன்று நாட்டை பொறுப்பேற்க ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே நாட்டை பொறுப்பேற்க முன்வந்தார். இன்று கட்டம் கட்டமாக நாட்டின் இயல்பு நிலையை வழமைக்கு கொண்டு வந்துள்ளார்.

எனவே நாட்டை மீட்டு மக்களை பாதுகாத்தவரிடம் இந்த நாட்டை ஒப்படைக்க வேண்டியது எமது கடமையாகும்-என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனையில் நடந்த போராட்டம் ஓர் இனத்துக்கு எதிரானது இல்லை

## அனைத்து சிவில் சமூக ஒன்றியம் விளக்கம்

கல்முனை, செப். 17

**கல்முனை வடக்கு பிரதேச செயலக நிர்வாக உரிமைகளை மீட்பதற்காக 174 நாட்களாக மேற்கொள்ளப்பட்ட போராட்டமானது ஓர் இனத்துக்கோ அல்லது தனி நபர்களுக்கோ எதிரானது இல்லை என்று அனைத்து சிவில் சமூக ஒன்றியம் தெரிவித்துள்ளது.**

ஜனாதிபதித் தேர்தல் நிறைவடையும் வரை இந்தப் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அனைத்து சிவில் சமூக ஒன்றியத்தின் நிலைப்பாடு மற்றும் கல்முனை வடக்கு பிரதேச செயலக போராட்டம், அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பில் விளக்கமளிக்கும் வகையில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பின்போதே அந்த அமைப்பினர் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தினுடைய நிர்வாக உரிமைகளை மீட்பதற்காக கல்முனை வடக்கு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட காணப்படுகின்ற 29 கிராம சேவையாளர் பிரிவுகளுக்குள்ளும் வாழுகின்ற பொதுமக்கள் பொது அமைப்புகள் அனைத்தும் ஒன்றாக இணைந்து ஒழுங்கமைத்து நடத்திக் கொண்டிருக்கின்ற உரிமைக்கான மக்கள் போராட்டமானது இன்றோடு 174ஆவது நாளாகவும் எமது இலக்கு நோக்கி எமது மக்களுடைய அபிலாஷைகளோடு அவர்களால் உருவாக்கப்பட்ட அந்த திட்டமிடல்களோடு தொடர்ச்சியாக நடந்து வருகின்றது.

ஆனாலும், எமது மக்கள் போராட்டத்தின் போது கலந்து கொண்டிருந்த பல அரசியல் வாதிகள் மற்றும் அரசியல் சார் தீர்மானங்களை முடிவுகளை எடுக்கக்கூடிய நபர்கள் மூலமாகவும் அரசுக்கு பலவேறு செய்திகளை நாங்கள் வழங்கியிருந்தோம்.

ஆனாலும், இந்த அரசு எமது மக்களுடைய போராட்டத்தை மதிக்கவோ அல்லது எமது மக்களுடைய நியாயமான போராட்டத்துக்கான தீர்வை வழங்குவதற்கோ முன் வந்திருக்கவில்லை என்பதையும் மாறாகத் தொடர்ந்தும் ஏமாற்றியே வந்துள்ளது என்பதையும் கூற கடமைப்பட்டுள்ளதோடு இந்தப் போராட்டமானது ஓர் இனத்துக்கோ அல்லது தனி நபர்களுக்கோ எதிரானது கிடையாது என்பதையும் இது ஓர் அரச நிர்வாக ரீதியான கட்டமைப்பை சீர் செய்வதற்கான போராட்டம் மாத்திரமே என்பதையும் வெளிப்படுத்துகின்றோம்- என்றனர்.(எ)

# அம்பாறை மாணவி பிரமுதி இலங்கை அணியில் இணைவு

கல்முனை, செப். 17

இலங்கை 19 வயதுக்கு உட்பட்ட தேசிய மகளிர் கிரிக்கெட் அணியில் அம்பாறை மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய கிராமப்புற பாடசாலையான உகன தேசிய பாடசாலை மாணவி பிரமுதி மெத்சரா இடம்பெற்றுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள 19 வயதுக்கு உட்பட்ட மகளிர் சர்வதேச கிரிக்கெட் போட்டி தொடரிலும், நியூசிலாந்துக்கு எதிரான தொடரிலும் விளையாடும் வாய்ப்பு பிரமுதி மெத்சராவுக்கு கிடைத்துள்ளது. (எ)




# கண்ணீர் சிந்தும் யானை!



ஓட்டமாவடி, செப்.17

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மஜ்மா நகர் பகுதியில் நடக்க முடியாமல் யானை ஒன்று கண்ணீர் சிந்திய நிலையில் காணப்படுகிறது.

இது தொடர்பில் நேற்றுத் திங்கட்கிழமை மஜ்மா நகர் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் ஏ. எல். சமீம், வனவிலங்கு அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார்.

இவ்வாறு நடக்க முடியாமல் விழுந்து கிடக்கும் யானைக்கு வனவிலங்கு அதிகாரிகள் சிகிச்சையளிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# மாம்பழ உற்பத்தியில் இரண்டாம் கட்டம் வெற்றி

கல்முனை, செப். 14

மாம்பழ அறுவடை இரண்டாம் கட்டம் இவ்வளவு வெற்றி பெறுவதற்கு மாணவர்களின் நல்லொழுக்கம் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவமும் தான் காரணம் என்று கல்முனை அஸ் - ஸுஹறா வித்தியாலய அதிபர் எம். எச். எஸ் ஆர். மஜிதிய்யா தெரிவித்தார்.

கல்முனை அஸ் - ஸுஹறா வித்தியாலயத்தில் மாம்பழ அறுவடை நிகழ்வு நேற்று பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். ஸஹூதுல் நஜீம் உள்ளிட்ட விருந்தினர்கள் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது, சுமார் 100இற்கும் அதிகமாக மாம்பழங்கள் அறுவடை செய்யப்பட்டன. மாணவர்களின் நல்லொழுக்கம் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவமும் தான் இதற்கு காரணம். மாணவர்களின் சுற்றாடல் சார் நடவடிக்கைகள் இந்த அறுவடை செயல்பாட்டில் தங்கி இருந்துள்ளது. ஒழுக்கம் உள்ள இடத்தில் தான் காய் கனிகள் பாதுகாப்பாக இருக்கும் என அதிபர் குறிப்பிட்டார்.

மேலும், இந்தப் பாடசாலையில் கடந்த 04. 10. 2023 அன்று முதல் கட்ட அறுவடை இடம்பெற்றிருந்ததுடன் இம்முறை இரண்டாம் கட்டத்தில் 100இற்கும் அதிகமாக அறுவடை செய்யப்பட்ட டொம் டேசி மாம்பழங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. (எ)

# தேர்தல் பிரசார பணியில் பாடசாலை மாணவர்கள்!

## கபே நிறைவேற்று பணிப்பாளர் கவலை

காத்தான்குடி, செப். 17

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் வன்முறை தொடர்பில் அதிகளவான முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளன. இதே வேளை, காத்தான்குடி பிரதேசத்தில் பாடசாலை மாணவர்கள் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுத்தப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் - கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் தெரிவித்தார்.

அத்தோடு, நாடளாவிய ரீதியில் கடந்த 14 ஆம் திகதி வரை தேர்தல் வன்முறை தொடர்பில் 934 முறைப்பாடுள் கிடைத்துள்ளதுடன் 8 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்றும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு, ஏறாவூர் நகரசபை மண்டபத்தில் கபே அமைப்பின் தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அறிவித்தல் விடுக்கப்பட்ட தினத்தில் இருந்து கபே அமைப்பு 25 மாவட்டங்களில் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றது. இதுவரை கபே அமைப்புக்கு 934 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதில் அதிகளவான முறைப்பாடுகள் தேர்தல் சட்டவிதிகளை மீறுகின்றமை தொடர்பாக அவதானிக்க கூடியதாகவுள்ளது. 2015, 2019 நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களுடன் ஒப்பிடும்போது சுமுகமான களநிலவரம் காணப்பட்டாலும் கடந்த 8ஆம் திகதிக்கு முன்னர் சட்டவிரோத தேர்தல் பிரசாரம், அரச சொத்து துஷ்பிரயோகம் போன்ற முறைப்பாடுகள் அதிகரித்திருந்ததுடன் அந்த காலப்பகுதியில் வன்முறைகள் குறைவாக இருந்தன. 8 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வன்முறைகள் அதிகரித்துள்ளன.

அத்துடன் சமூகவலைத்தளங்களை பாவித்து வேட்பாளர்களை இழிவுபடுத்துகின்ற பொய்யான பிரசாரங்களை வீடியோ பதிவுகள் போலி முகநூல் மற்றும் வட்சப் ஊடாகவும் பதிவுகள் இடப்பட்டுள்ளன. இவ்வாறான செயல்பாடு சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கு பாதகத்தை ஏற்படுத்தக் கூடியது.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்திலே காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி பிரதேசங்களில் வன்முறை அதிகரிக்கப்படலாம் என்கின்ற சூழ்நிலை இருந்தபோதிலும் இதுவரை எந்தவொரு பெரும் வன்முறைகளும் இடம்பெறவில்லை- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹைப்பர் சொனிக் ஏவுகணைகளை வீசி இஸ்ரேல்மீது மீண்டும் சரமாரி தாக்குதல்



ஜெருசலேம், செப். 17

**இஸ்ரேல் மீது ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஹைப்பர் சொனிக் ஏவுகணைகளை வீசி சரமாரி தாக்குதல் நடத்தினர். இதனால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.**

இஸ்ரேல் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நேற்று மீண்டும் ஏவுகணை தாக்குதல் நடத்தினர். ஏமனில் இருந்து ஏவப்பட்ட ஹைப்பர் சொனிக் ஏவுகணைகள் இஸ்ரேலை தாக்கின. இஸ்ரேல் வான்பரப்புக்குள் வந்த ஏவுகணைகளை இஸ்ரேலின் ஏவுகணை தடுப்பு அமைப்பு தாக்கியது. ஆனாலும், ஏவுகணையின் பாகங்கள் வெடித்து சிதறின. மேலும், ரொக்கெட்கஞம் இஸ்ரேலுக்குள் விழுந்தன. இதனால், இஸ்ரேலின் ரயில் நிலையத்தில் சிறுபாதிப்பு ஏற்பட்டது. மேலும், பென் ஷபென் வனப்பகுதியில் தீ விபத்து ஏற்பட்டது. இதையடுத்து, விரைந்து வந்த தீயணைப்புப் படையினர் தீயை அணைத்தனர்.

ஏமனில் இருந்து ஏவப்பட்ட ஹைப்பர் சொனிக் ஏவுகணை 11 நிமிடத்தில் இஸ்ரேலை தாக்கியதாக ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். அதே வேளை, இந்த ஏவுகணை தாக்குதலில் காயமோ, உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலை தொடர்ந்து ஹவுதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதலுக்குப் தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரித்துள்ளார்.

# ட்ரம்பை இலக்கு வைத்து மீண்டும் துப்பாக்கிச் சூடு

புளோரிடா, செப். 17



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும், குடியரசுக் கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுபவருமான டொனால்ட் ட்ரம்பை இலக்கு வைத்து மீண்டுமொரு முறை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இந்த முறை காயமேதுமின்றி ட்ரம்ப் தப்பியிருந்தாலும் 3 மாதங்களில் இரண்டாவது முறையாக ட்ரம்பை குறிவைத்து துப்பாக்கிச் சூடு நடந்துள்ளது அமெரிக்க அரசியல் களத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

டொனால்ட் ட்ரம்ப், நேற்று புளோரிடாவில் உள்ள கோல்ப் விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது அவர் விளையாடிக் கொண்டிருந்த பகுதியை குறிவைத்து 4 முறை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. உடனடியாக ட்ரம்பின் பாதுகாவலர்கள் துப்பாக்கிக் குண்டுகள் வந்த திசையை நோக்கி தாக்குதலைத் தொடங்கினர். உடனே அங்கிருந்த மர்ம நபர் தான் கொண்டு வந்த உடைமைகளை விட்டு விட்டு அந்த இடத்திலிருந்து காரில் தப்பியுள்ளார்.

இது குறித்து ட்ரம்பின் பாதுகாப்புக்கான இரகசிய சேவை முகவர் கூறுகையில், “ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் ஏ கே 47 துப்பாக்கி மற்றும் பிஸ்டல் ஒன்றை கொண்டுவந்துள்ளார். அவர் விட்டுச் சென்ற பையில் தூரத்தில் இருப்பதை துல்லியமாகக் காணும் ஸ்கோப் ஒன்றும் இருந்தது. அந்த நபர் காரில் தப்பியதை நேரில் கண்ட நபர் எடுத்த புகைப்படத்தில் அவரது வாகன எண் பதிவாகியிருந்தது. அதை வைத்து அந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். துப்பாக்கிச் சூடு நடத்தியதன் நோக்கம் குறித்து ஏதும் தெரியவில்லை” எனத் தெரிவித்தார். (எ)

# இந்தியாவுடன் மாலைதீவுக்கு எந்த பிரச்சனையும் இல்லை

## வெளிவிவகார அமைச்சர் விளக்கம்

மாலே, செப். 17



இந்தியா - மாலைதீவு இடையே இருந்த தவறான புரிதல்கள் தற்போது தீர்த்து வைக்கப்பட்டு விட்டன என்று மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் மூசா ஜமீர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடன் எந்தப் பிரச்னையும் தற்போது இல்லை என்றும் அவர் கூறியுள்ளார். மாலைதீவில் இருந்த இந்திய படைகளை வெளியேறும்படி, ஜனாதிபதி முகமது முய்சு உத்தரவிட்டதை தொடர்ந்து, இரு நாடுகளுக்கு இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டது. எங்கள் அரசின் ஆரம்ப காலத்தில், இந்தியாவுடன் கசப்பான உறவு இருந்தது என்பது அனைவருக்கும் தெரியும். இந்தியா - மாலைதீவு இடையே இருந்த தவறான புரிதல்கள் தற்போது தீர்த்து வைக்கப்பட்டு விட்டன. சீனா மற்றும் இந்தியாவுடன் நாங்கள் நல்ல உறவைக் கொண்டுள்ளோம். இரு நாடுகளும் மாலைதீவை ஆதரிக்கின்றன- என்றார். (எ)

# ஸ்பேஸ் எக்ஸ் சுற்றுலா விண்கலம் பாதுகாப்பாக பூமிக்கு திரும்பியது

புளோரிடா, செப். 17



ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் போலாரிஸ் டான் குழுவினர் விண்வெளியில் ஐந்து நாட்கள் பயணத்தை முடித்துக் கொண்டு பூமிக்கு திரும்பினர். இதனை ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் சமூக வலைத்தளப் பதிவு மூலம் பகிர்ந்துள்ளது.

வணிக ரீதியான விண்வெளி பயணத்தில் இதுவொரு பெரும் சாதனை என நாசா தெரிவித்துள்ளது. இந்த பயணத்தில் கோடீஸ்வரர் ஐசக்மேன், ஓய்வு பெற்ற அமெரிக்க விமானப் படை வீரர் ஸ்கார் போட்டீட் மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவன ஊழியர்கள் ஷாரா கில்லீஸ், அன்னா மேனன் ஆகியோர் அங்கம் வகித்தனர். கடந்த 11ஆம் திகதி இவர்களது விண்வெளி பயணம் தொடங்கியது.

பூமிக்கு மேலே சுமார் 700 கிலோ மீற்றர் உயரத்தில் இவர்கள் விண்வெளி நடை பழகினர். அதுவும் தொழில்முறை விண்வெளி வீரர்கள் அல்லாத ஐசக்மேன், ஷாரா கில்லீஸ் ஆகியோரும் விண்வெளியில் மிதந்தபடி நடை மேற்கொண்டனர். இந்த பயணத்தில் சுமார் 36இற்கும் மேற்பட்ட விஞ்ஞான ரீதியிலான சோதனைகளை மேற்கொண்டனர். (எ)

# நைஜீரியாவில் படகு கவிழ்ந்தது விவசாயிகள் 64 பேர் உயிரிழப்பு

லாகோஸ், செப். 17

நைஜீரியாவில் 70இற்கும் மேற்பட்ட விவசாயிகளை ஏற்றிச் சென்ற மரப்படகு ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.இதில் விவசாயிகள் 64 பேர் உயிரிழந்தனர்.

வடமேற்கு நைஜீரியாவில் ஜம்பாரா மாநில விவசாயிகள் தங்களுடைய விவசாய பணிகளுக்காக தினந்தோறும் ஆற்றைக் கடந்து செல்கிறார்கள். அந்த வகையில் 70 பேர் படகில் சென்ற போது திடீரென ஆற்றில் கவிழ்ந்தது. இதில் விவசாயிகள் 64 பேர் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். 6 பேர் மீட்கப்பட்டனர். இந்த விபத்து அந்த நாட்டில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (எ)

# அரசியல் வன்முறைகளுக்கு அமெரிக்காவில் இடமில்லை

## ஜனாதிபதி ஜோ பைடன்

வாஷிங்டன், செப். 17

“நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல், அமெரிக்காவில் எந்தவிதமான அரசியல் வன்முறைகளுக்கும் இடமில்லை. ட்ரம்ப் நலமுடன் இருக்கிறார் என்பதில் மகிழ்ச்சி. ட்ரம்ப் மீதான தாக்குதல் குறித்த விசாரணைக்கு உத்தரவிட்டப்பட்டுள்ளது. அவருடைய பாதுகாப்பை உறுதி செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது” என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார். (எ)

# ரஷ்யாவுடன் நட்பு பலப்படுத்தப்படும்

## கிம் ஜாங் உன் உறுதி

பியாங்யாங், செப். 17

ரஷ்யா உடனான நட்பு மேலும் பலப்படுத்தப்படும் என்று வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் தெரிவித்தார்.

ரஷ்யா இராணுவம் இரண்டரை ஆண்டுகளாக உக்ரைனுடன் போர் நடத்தி வரும் நிலையில் ரஷ்யா இராணுவத்துக்கு ஆயுதங்கள் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதனால் ரஷ்ய இராணுவம், நட்பு நாடுகளிடம் ஆயுதங்களை பெற்று வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ள நிலையில் ரஷ்யாவுக்கு ஆயுதங்களை வழங்கி வரும் வடகொரியா



ரஷ்யாவுடனான நட்பு மேலும் பலப்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ளது. (எ)

# ட்ரம்பை கொலை செய்ய முயன்றவர் உக்ரைன் ஆதரவு செயல்பாட்டாளர்

## அமெரிக்க ஊடகங்கள் தகவல்

வாஷிங்டன், செப். 17

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை கொலை செய்ய முயன்றவர் உக்ரைன் ஆதரவு செயல்பாட்டாளர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரயான் வெஸ்லே ரூத் என்ற 58 வயது நபரே ட்ரம்பை கொல்வதற்கு திட்டமிட்டார் என அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இவர் உக்ரைன் சார்பில் போரிடுவதற்காக வெளிநாட்டவர்களை இணைக்க முயன்றார் என்றும் உக்ரைனுக்கு பல முறை சென்று வந்துள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு பயணிப்போர் அவதானத்துடன் செயற்படுக!

## அமெ. இராஜாங்கத் திணைக்களம் எச்சரிக்கை

கொழும்பு, செப். 17

**இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் போது அவதானத்துடன் செயற்படுமாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அந்நாட்டு மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

பயண ஆலோசனை அறிக்கை ஒன்றை வெளியிட்டு அமெரிக்க இராஜாங்க திணைக்களம் இந்த விடயத்தை தெரிவித்துள்ளது.

மேலும், பொதுமக்கள் அதிகம் ஒன்றுகூடும் இடங்களுக்கு செல்வதை தவிர்க்குமாறும் இலங்கையிலுள்ள அமெரிக்கர்களிடம் கேட்டுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்கு முன்னரும், அதற்குப் பின்னரும், இலங்கையில் போராட்டங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைதியான பொதுக் கூட்டங்கள் கூட முன்னறிவிப்பின்றி வன்முறையாக மாறக்கூடும் எனவும் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் எச்சரித்துள்ளது.

# ஒரு தொகைகஞ்சாவுடன் பெண் பளையில் கைது!

கிளிநொச்சி, செப். 17

கிளிநொச்சி - பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வத்திராயன் பகுதியில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஒரு தொகை கேரளா கஞ்சா சிறப்பு அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சிறப்பு அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து அப்பகுதியில் சிறப்பு அதிரடிப் படையினர் சுற்றி வளைப்பை மேற்கொண்டனர்.

இதன்போது வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சா மற்றும் அப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்திலும் ஒரு தொகை கஞ்சாவை கைப் பற்றியிருந்தனர்.

இதன்போது அப்பகுதியில் காணப்பட்ட கப் வாகனத்தையும் சிறப்பு அதிரடிப்படையினர் பறி முதல் செய்ததுடன், குறித்த சம்வத்துடன் தொடர்புடைய பெண்ணொருவரையும் சந்தேகத்தின் பேரில் சிறப்பு அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் தடையை பொருட்கள் அனைத்தும் பளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானவர் மரணம்!

கொழும்பு, செப். 17

கல்கிஸை - படோவிட்ட பகுதியில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் காயமடைந்த நபர் உயிரிழந்துள்ளார்.

கல்கிஸை - படோவிட்ட பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் காயமடைந்த நபர், சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே குறித்த துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் கல்கிஸை - படோவிட்ட பகுதியைச் சேர்ந்த 31 வயதான மதுஷான் சுவாரிஸ் என்ற நபரே உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெஹிவளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(அ)

# அறநெறிப் பாடசாலைக்கு கட்டடம் 2 மில்லியன் ரூபா நிதியில் அமைப்பு

வவுனியா, செப். 17

வவுனியா, வெங்கல செட்டிக்குளம் பிரதேசத்திற்கு உட்பட்ட கணேசபுரம் திருமூலர் அறநெறிப் பாடசாலைக்கு புதிய கட்டடம் அமைக்கப்பட்டு நேற்று முன் தினம் திறந்து வைக்கப்பட்டது.

இரண்டு மில்லியன் ரூபா செலவில் குறித்த கட்டடம் அமைக்கப்பட்டு, சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகன தாஸ் சுவாமிகளால் திறந்து வைக்கப்பட்டது.

திருமூலர் அறநெறிப் பாடசாலை தலைவர் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது 1 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் பாடசாலைக்கு வழங்கி வைக்கப்பட்டதுடன், அறநெறியில் கற்கும் மாணவர்களுக்கு தலா 10 கிலோ வீதம் அரிசியும் வழங்கி வைக்கப்பட்டது.

மாணவர்களின் நடனம், வில்லிசை, பேச்சு உட்பட பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வெங்கல செட்டிக்குளம் பிரதேச சபை இந்து கலாசார உத்தியோகஸ்தர் சி. சிவகஜன், வெங்கல செட்டிக்குளம் பிரதேச செயலக உத்தியோகத்தர் ச.கஜேந்திரன், சமூக செயற்பாட்டாளர் இ.தயாபரன், ஆச்சிரம தொண்டர்கள், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், கிராம அபிவிருத்தி சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள், கிராம மக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

(அ)

# எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் ஆயுதமுனையில் பணம் கொள்ளை

கொழும்பு, செப். 17

புத்தளம் - மஹாவெவ பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் கைத்துப்பாக்கியை காண்பித்து நேற்று முன் தினம் அதிகாலை இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தொடுவாவ பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றுக்கு நேற்று முன் தினம் அதிகாலை மோட்டார் சைக்கிளில் வருகை தந்த நபர் ஒருவர், எரிபொருள் நிரப்பு நிலையத்தின் முகாமையாளரிடம் கைத்துப்பாக்கியை காண்பித்து சுமார் 207,500 ரூபாவை கொள்ளையடித்துச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த கொள்ளைச் சம்பவம் தொடர்பில் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் முகாமையாளர் தொடுவாவ பொலிஸில் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளார்.

குறித்த முறைப்பாட்டை அடுத்து, கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படும் எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் உள்ள வர்த்த நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி கமெராக்களை பரிசோதனை செய்து, சந்தேக நபரை கைது செய்வதற்கான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தொடுவாவ பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# தேர்தல் முறைப்பாடு 4, 215 ஆக அதிகரிப்பு!

கொழும்பு, செப். 17

ஜூலை 31ஆம் திகதியில் இருந்து 15 ஆம் திகதி வரை 4, 215 ஆக அதிகரித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த 24 மணி நேரத்தில் ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய 184 முறைப்பாடுகள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

இதில் 1,360 முறைப்பாடுகள் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களுக்கு 2,855 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

இந்தக் காலப்பகுதியில் தேர்தல் வன்முறைகள் தொடர்பில் 30 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

(அ)

# தேர்தலுக்கான ஏற்பாடுகள் யாழ்.மாவட்டத்தில் பூர்த்தி!

## தெரிவத்தாட்சி அலுவலர் பிரதீபன்

யாழ்ப்பாணம், செப். 17

யாழ்.மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளதாக யாழ்.மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக குழுக் கடமைகளில் ஈடுபடும் அலுவலர்களுடனான முன்னாயத்தக் கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போதே அவர் இதனை தெரிவித்தார்

வாக்கெண்ணும் நிலையமாகச் செயற்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் குழுக்களின் செயற்பாட்டில் ஈடுபடும் அலுவலர்கள் தங்களது சிறப்பான தொடர்பாடல் திறன் மூலம் வினைத்திறனாகச் செயற்பட்டுத் தேர்தல் கடமைகளுக்காக இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் நலன்களைப் பேணிச் சிறப்பான செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பை வழங்குமாறும் அவர் வலியுறுத்தினார்.

(அ)

# இரண்டு கோடி ரூபா பெறுமதியான சிகரெட்டுக்களுடன் ஒருவர் கைது!

கொழும்பு, செப். 17

இரண்டு கோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சிகரெட்டுகள் மற்றும் மின் சிகரெட்டுகளை நிரப்புவதற்கு பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்களுடன், கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

டுபாயிலிருந்து நாடு திரும்பிய குறித்த நபர், கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கொழும்பு - 13 பிரதேசத்தை சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் அவரது பயணப் பொதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு இலட்சத்து 20 ஆயிரத்து 400 சிகரெட்டுகள் அடங்கிய 602 அட்டைப் பெட்டிகளை கைப்பற்றியுள்ளனர்.

(அ)

# நாடளாவிய ரீதியில் 673 பேர் கைது!

கொழும்பு, செப். 17

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலத்துக்குள் மேற்கொள்ளப்பட்ட விசேட போதைப்பொருள் சுற்றிவளைப்பு தொடர்பில் 673 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 668 ஆண்களும் 05 பெண்களும் அடங்குவதாக பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 17 பேர் பொலிஸ் தடுப்பில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறிதரன், செயலாளர் ப.சத்தியலிங்கம், மட்டக்களப்பு மாநகர சபை முன்னாள் முதல்வர் சரவணபவன், வடக்கு மாகாண சபைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் பங்கேற்றனர்.

நேற்று கூட்டத்தில் கலந்துகொண்ட ஆறு உறுப்பினர்களில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மாத்திரம் குறித்த தீர்மானத்துக்கு இணக்கப்பாடு தெரிவிக்காத நிலையில் ஏனைய ஐவரும் தமது இணக்கப்பாட்டை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர், தமிழ் அரசுக் கட்சியின் தீர்மான அறிக்கையை, கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, ஊடகங்கள் முன்னிலையில் வாசித்தார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவையாவன-

இலங்கையில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவிருக்கின்றது. இத்தேர்தலில் மூன்று பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் பரிசீலிக்கப்பட்டன. இத்தேர்தல் விஞ்ஞாபனங்களில் குறிப்பாக தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் தமிழ் மக்களின் பிரதேசங்களின் பொருளாதார மேம்பாடு பற்றி கவனம் செலுத்தப்பட்டது.

இவ்விஞ்ஞாபனங்களில் புதிய அரசியலமைப்பு உருவாக்குதலும் ஏற்கனவே அரசியலமைப்பில் உள்ள பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக அமுலாக்குவதும் ஆகும். ஒற்றையாட்சி மற்றும் புத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாதவொன்றாகும்.

முக்கியமாக இவ்விடயங்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் கூட்டணி தலைவர் சஜித் பிரேமதாச, ஜேவிபி தலைவர் அநுர குமார திசாநாயக ஆகியோருடன் நேரடியாக பேச்சுக்கள் இடம்பெற்றன.

தமிழ் அரசியல் தலைமைகள் தமிழ்ப் பேசும் மக்களின் தேசிய இனப் பிரச்னைக்கு தீர்வு காணும் பொருட்டு இணைப்பாட்சி அடிப்படையிலான சமஷ்டிக் கட்டமைப்பில் முழுமையான தன்னாட்சி சம்பந்தமாக தொடர்ந்து போராடி வந்துள்ளோம். ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும், புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தின் பொருட்டு தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் தீர்வுக்கான பிரேரணை முன்வைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் முஸ்லிம் சமூகத்துடனும் மலையக தமிழர்களுடன் இணைந்து செயற்படுதல் வேண்டும். 13ஆவது அரசியல் திருத்தம் அரசியலமைப்பின் ஒற்றையாட்சிக்குட்பட்டது. இதனை அரசியல் தீர்வாக எம்மால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதைக் குறிப்பிட வேண்டும். இருப்பினும் தமிழினத்தின் பிரச்னைக்கு நிரந்தர அரசியல் தீர்வொன்றை அடையும் வரை இந்திய அரசின் நட்புறவுடன் 13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் நடைமுறையிலிருக்கும் மாகாண அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த நாம் முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.

2002 டிசெம்பரில் ஏற்பட்ட ஒஸ்லோ உடன்பாட்டில் சில அடிப்படைக் கோட்பாடுகளின் மீது இணக்கம் காணப்பட்டது. அக்கோட்பாடு பின்வருமாறு அமைந்தது. இந்த வரலாற்று நிகழ்வு இன்றும் பரிசீலனைக்குரியது. 'ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ்பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடப் பகுதிகளில் உள்ளக சுயநிர்ணய கொள்கையின் பிரகாரம் சமஷ்டிக் கட்டமைப்பின் அடிப்படையிலமைந்த தீர்வொன்றை ஆராய்தல் என்பதாகும்.

சர்வதேச நியமங்களின் படியும், சர்வதேச சாசனங்களின் படியும் தமிழர்களாகிய நாங்கள் தனிச்சிறப்புமிக்க மக்கள் குழாமாவோம். ஒரு மக்கள் குழாமான நாங்கள் பேரினவாதத்தின் பிடிக்கு ஆட்படாது கௌரவத்துடனும் சுயமரியாதையுடனும் சுதந்திரமாகவும், அச்சமின்றியும் நாட்டின் ஏனைய மக்களுடன் சமத்துவமுள்ள மக்களாக வாழ விரும்புகிறோம்.

2015 இல் இலங்கை வந்த பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் மார்ச் 13இல் இலங்கையில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது பின்வருமாறு கூறினார். 'எமது சமூகத்திலுள்ள அனைத்துப் பாகங்களின் அபிலாசைகளுக்கு நாம் மதிப்பளிக்கும் போது எம்நாட்டின் ஒவ்வொரு பிரஜையின் சக்திகளையும் எமதுநாடு உள்வாங்கிக் கொள்ளும்.

'இறையாண்மை என்பது மக்களிடமே உண்டு அரசிடம் அல்ல என்பதை நாம் வலியுறுத்துகிறோம். 'ஜனாதிபதித் தேர்தல் முடிந்தபின் எங்களால் சமர்ப்பிக்கப்படும் அரசியலமைப்புக்கான அறிக்கையில் குறிப்பிடப்படும் தமிழ்த் தேசிய இனத்திற்கான அரசியல் தீர்வை அடைவதற்கும், தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளுக்கும் தீர்வுகாண வெற்றிபெறும் ஜனாதிபதியுடனும் அரசுடனும் வேண்டிய பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்போம்.' தமிழ்த் தேச மக்கள் அரசியல் தீர்வைத் தீர்மானிப்பதிலும் அந்த இலட்சியத்தை அடைவதற்கும் இடர்களோ முரண்பாடுகளோ ஏற்படாமல் நல்லெண்ணத்துடன், ஒற்றுமை உணர்வுடன் தேர்தலின் போதும், எதிர்காலத்திலும் ஒன்றாக நின்று உழைப்போம் என திடமான தீர்மானத்தைக் கொண்டிருக்கிறோம்.'

இந்த நோக்கத்தை நாடளாவிய ரீதியில் செயல்படுத்துவதற்கென நாம் கடந்த காலத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் எமது பெரும் பங்களிப்பை வழங்கி இருந்தோம். இப்போதைய ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக எம்மால் பரிசீலிக்கப்பட்ட மூன்று பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் எதுவும் எமது அடிப்படை அரசியல் கோரிக்கைகளை முழுமையாக உள்ளடக்கவில்லை என்பதைக் கருத்தில் கொள்கிறோம். இந்த விஞ்ஞாபனங்களின் அடிப்படையில் எமது தாயகம், தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணயம் என்ற எமது அடிப்படைக் கோட்பாடுகளில் எந்தவித விட்டுக்கொடுப்பும் இல்லாத வகையில் ஐக்கிய மக்கள் கூட்டணி வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் விஞ்ஞாபனம் ஒப்பீட்டு ரீதியில் ஓரளவு திருப்தியாகக் காணப்படுகின்றது.

எனவே, 2024 செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாச அவர்களை ஆதரிப்பதென்று எமது கட்சியின் மத்திய குழுத் தீர்மானத்திற்கு அமைவாக மக்கள் தங்கள் வாக்கை செலுத்த வேண்டும் -என்றுள்ளது. (அ)

## துன்பங்களுக்கு...

வடக்கு மாகாணத்தில் உள்ள, வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்க பிரதிநிதிகள் கூட்டாகக் நேற்றுக் கோரிக்கை விடுத்தனர்.

தமிழ்ப் பொதுக்கட்டமைப்பின், யாழ்ப்பாண அலுவலகத்தில், நடாத்திய ஊடக சந்திப்பின் போதே, அவர்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்தனர். (அ)

## ஜனாதிபதியா...

தேர்தலில் வெற்றி பெறுவதற்காக அரசாங்கம் கதிர்காமம் உள்ளிட்ட புனித பூமிகளில் மதுபானச்சாலைகளுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குகின்றது.

இது வேதனைக்குரிய விடயமாகும். பொதுமக்களின் வரியினூடாக ஜனாதிபதிக்கான வேதனம் பெறுவது தமது எண்ணம் இல்லை அவ்வாறானவர்களிடம் இருந்து நாட்டை பொறுப்பேற்றும், இலங்கையைச் சிறந்த தரத்திற்கு முன்னேற்றுவதே தமது இலக்காகும்-என்றார். (அ)

## இறுதிக்கட்ட...

வருகின்றன.

அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் கூட்டணிகளின் தலைவர்களெல்லாம் கடைசி கூட்டத்தில் ஒன்றாக பங்கேற்பதால் உச்சக் கட்ட பாதுகாப்பு ஏற்பாட்டுக்குரிய வியூகங்களும் வகுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோரின் கடைசி தேர்தல் பிரசாரக் கூட்டம் கொழும்பு மாநகர எல்லையை மையப்படுத்தியதாக அமையவுள்ளது.

இதேவேளை ஜனாதிபதி தேர்தல் நிலைவரம் தொடர்பில் வெளிநாட்டு உளவு அமைப்புகளும் களத்தில் இறங்கி தீவிரமாக செயற்பட்டுவருதாக தகவல் வெளியாகியுள்ளது. அமெரிக்க, இந்திய கூட்டணிக்கும், சீனாவுக்கும் இலங்கை தேர்தல் முக்கியத்துவம் மிக்கதாகக் கருதப்படுகின்றது.

நாடளாவிய ரீதியில் 13 ஆயிரத்து 421 வாக்களிப்பு நிலையங்களில் 21 ஆம் திகதி காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது. மாலை 6 மணி முதல் வாக்கெண்ணும் பணி இடம்பெறும். (அ)

## தமிழ் அரசின்...

எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதாகவே இருந்தது.

மத்திய குழுவில் கடந்த முதலாம் திகதி எடுக்கப்பட்ட தீர்மானம் பிழை என நான் எழுத்து மூலமாகவும் வழங்கி இருக்கிறேன். நான் ஒரு தெரிவு செய்யப்பட்ட தலைவர் என்ற ரீதியில் எழுத்து மூலமாக அறிவித்து விட்டுத்தான் பிரித்தானியா சென்று இருந்தேன்.

6 ஆம் திகதி நான் மீளவும் இலங்கைக்கு திரும்புவேன். ஏழாம் திகதி வரை கூட்டத்தை வைக்க வேண்டாம் எனக் கூறியிருந்தேன். அவ்வாறு கூட்டங்கள் வைத்தாலும் தீர்மானங்கள் எடுக்கப்படாது என்று பொதுச்செயலாளர் சத்தியலிங்கம் எனக்கு உறுதிமொழியையும் தந்திருந்தார்.

தற்போதைய தலைவராக இருக்கின்ற மாவை சேனாதிராசாவை 26 ஆம் திகதி சந்தித்து பேசுகின்றபோது நாங்கள் தீர்மானங்கள் எதுவும் நிறைவேற்றமாட்டோம். சில விடயங்கள் தொடர்பாக பேச இருக்கிறோம் என தெரிவித்திருந்தார்.

இவற்றையெல்லாம் தாண்டி 2024. 8. 18ஆம் திகதி ஆறு பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டு அந்தக் குழு கூடி தீர்மானம் எடுக்காத நிலையில் மத்திய குழுவில் அவசர அவசரமாக யாருடைய தேவைக்காக யாருடைய தீர்மானத்தை எடுத்தார்கள். சஜித் பிரேமதாஸவுக்காக அந்த தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

அந்த தீர்மானம் எடுத்த பின்னர் நான் கடிதம் மூலமாகவும் தெரிவித்திருந்தேன். இதனை நான் எதிர்க்கிறேன். என்னைப் பொறுத்தவரை தமிழ் மக்களுடைய தேசிய உணர்வுகளை பிரதிபலிக்கக் கூடிய வகையில் நாங்கள் ஒரு பொது வேட்பாளருக்கு வாக்களிக்கவேண்டும்.

பொது வேட்பாளரை நிறுத்தவேண்டும் என்கின்ற ஒரு தெளிவான நிலைப்பாட்டை கொண்டு இருந்தேன். அதனை இப்போதும் கொண்டிருக்கிறேன். இன்றும் இந்தக் கூட்டத்தில் அதனை வலியுறுத்தி என்னுடைய கருத்து இவர்களுடைய தீர்மானத்துக்கு எதிரானது என்பதனை பதிவு செய்யுமாறு தெரிவித்து இருக்கிறேன்.

சிறிதரன் இதனை ஏற்கவில்லை அதாவது சிறிதரன் சஜித் பிரேமதாஸவுக்கு மட்டுமல்ல ரணில் விக்கிரமசிங்க, அநுரகுமார திஸநாயக்க உள்பட்ட தென்னிலங்கையினுடைய வேட்பாளர்கள் யாருக்கும் ஆதரவு இல்லை என்பதை பதிவு செய்யுமாறு குறிப்பிட்டு அந்த கூட்டத்திலிருந்து என்னுடைய நேரம் முடிந்ததால் புறப்பட்டேன்-என்றார். (அ)

## ஊரடங்கை...

மாத்திரமே உள்ளது எனவும் ஜனாதிபதி தேர்தல் பாதுகாப்பு தொடர்பில் தேவையான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

பெரும் அசம்பாவிதங்கள் எதுவுமின்றி இதுவரை நாடு முழுவதும் 500க்கும் மேற்பட்ட தேர்தல் பேரணிகள் நடத்தப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை உறுதிப்படுத்துவதற்கு பொலிஸார் தொடர்ந்தும் தமது முயற்சிகளை மேற்கொள்வதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## தமிழின...

இலட்சியத்துடன் இருக்கும் உங்கள் முன்னிலையில் அந்த இலட்சியத்துக்காக என்னுடைய வாக்கையும் அளிப்பேன் என்ற உறுதிப்பாட்டுடன் வருகைதந்துள்ளேன்.

அதுமட்டுமன்றி, நீங்கள் அனைவரும், தமிழர்களின் இட்சியத்துக்கான எழுச்சியை வெளிப்படுத்தும் வகையில் உங்களது வாக்குகளை எதிர்வரும் 21ஆம் திகதி உங்களுடைய வாக்குகளை அளிக்க வேண்டும் என்றும் நான் வலியுறுத்துகின்றேன்.

கடந்த காலத்தில் எமது விடுதலைக்காக அர்ப்பணிக்கப்பட்ட உயிர்களை நெஞ்சில் நிறுத்தியவனாக , அதற்காக பயணிக்கும் எமது உயிர்களும் எப்போது வேண்டுமானாலும் போகலாம், பணயம் வைக்கப்படலாம் என்பதை நினைவுபடுத்தியவனாக, எதிர்கால எமது இலட்சியத்துக்கான பயணத்தில் அர்ப்பணிப்பு செய்வதற்கு தயாராக உள்ள மக்களுக்கும் நன்றி உடையவனாக தேசமாக எழுச்சி அடைவோம். அதற்காக உழைப்போம் என்று உரைத்து விடைபெறுகின்றேன்-என்றார். (அ)

## எந்த வேட்பாளர்...

மூவருமே உச்சபட்ச அதிகாரப்பகிர்வினை முன்னிறுத்தி செயலாற்றுவதாகக் கூறியிருக்கின்றார்கள். அதில் ஏனைய வேட்பாளர்களை விட சஜித் பிரேமதாச சற்று அதிகமாகக் கூறியிருக்கிறார். எனவே அவருடன் இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கும்.

இருப்பினும் சஜித் பிரேமதாஸ வெற்றி பெறாமல் ரணில் விக்கிரமசிங்கவோ அல்லது அநுரகுமார திஸநாயக்கவோ வெற்றியீட்டினால் என்ன நிலைமை என்ற கேள்வி பலரால் கேட்கப்படுகின்றது. அது நியாயமான கேள்வி. எங்களுடைய நோக்கம் இவரோ அல்லது அவரோ வெல்லவேண்டும் என்பது அல்ல. மாறாக எமது மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு பெறப்படவேண்டும் என்பதே நோக்கமாகும்.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்த பிரதான மூன்று வேட்பாளர்களில் ஒருவர் தான் வெற்றி பெறமுடியும். ஆனால் மற்றைய இருவரும்கூட அவர்கள் வெளிப்படையாக நாட்டு மக்களுக்குக் கூறியிருக்கும் நிலைப்பாட்டின்படி, வெற்றி பெறும் வேட்பாளர் எடுக்கும் முயற்சிக்கு எதிராக செயற்படமுடியாது. எனவே மூன்று பிரதான வேட்பாளர்களையும் அதிகாரப்பகிர்வு குறித்த வாக்குறுதியைக் கொடுக்க வைத்திருக்கிறோம். இது "எமது மக்களின் வாக்குகளை உங்களுக்குத் தருகிறோம். அதேபோன்று நீங்கள் எமது மக்களுக்குரிய தீர்வைத் தாருங்கள்" என்ற பேரம் பேசுதலின் அடிப்படையில் செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவே மூவரில் எந்த வேட்பாளர் வென்றாலும், தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதை முன்னிறுத்திய நடவடிக்கைகளில் தமிழரசுக்கட்சி தொடர்ந்து ஈடுபடும்.

அதேவேளை மேற்குறிப்பிட்ட பேரம் பேசுதலின் அடிப்படையில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் உச்சபட்ச வாக்குறுதி அளித்த சஜித் பிரேமதாஸவுக்கு எமது மக்களின் வாக்குகளை அளிப்பதாகக் கூறியிருக்கின்றோம். எனவே இவ்விடத்தில் தமிழ் மக்களும் ஒத்துழைத்து சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்கவேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அழிந்துபோகக்கூடிய ஆபத்தில் கிழக்கு மாகாண தமிழ் மக்கள்!

## வடக்கு, கிழக்கு இணைவே தீர்வு என்கிறார் கஜேந்திரன்

மட்டக்களப்பு, செப். 17

**கிழக்கு மாகாணத்தில் இருக்கும் தமிழ் மக்கள் 15 ஆண்டுகளில் இருந்த இடம் தெரியாது அழிந்து போகக்கூடிய ஆபத்து இருக்கிறது. ஆகவே இவை எல்லாவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமாக இருந்தால் தமிழர் தேசம் ஒன்று அங்கீகரிக்கப்பட்ட தீர்வு எட்டப்படவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.**

தமிழர்களுடைய தலைநகரமான திருகோணமலை இன்று தமிழர்களுக்கு சொந்தமான நிலங்கள் முழுவதும் கபளீகரம் செய்யப்பட்டு, 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் 32 விகாரைகள் அமைக்கப்பட்டு மிகப் பெரிய பௌத்த மயமாக்கலுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பில் தேர்தல் புறக்கணிப்பு பிரசாரத்தில் ஈடுபட்டு வரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகவும் சஜித் பிரேமதாஸ எதிர்க்கட்சித் தலைவராகவும் அநுரகுமார திஸநாயக்க வலிமையான ஓர் எதிரணியின் கட்சி தலைவராகவும் பாராளுமன்றத்தில் இருந்து கொண்டிருக்கும்போது தான் இந்த பௌத்தமயமாக்கல் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

அதேபோல் மட்டக்களப்பு எல்லைப் பகுதியான மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரையில் 3 லட்சம் மாடுகள் அழிவுக்கு உள்ளாக்கப்பட்டு 20 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு பேரினவாதிகளால் ஆக்கிரமிக்கப்பட்டு அபகரிப்பு தொடர்ந்து கொண்டிருக்கிறது இவை எல்லாம் நடைபெறுகிறது சஜித்தோ, அநுரவோ, ரணிலோ இதனை தடுப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இன்று அம்பாறை மாவட்டம் முற்றாக பறிபோய்விட்டது. அதேபோல் திருகோணமலை மாவட்டமும் கிட்டத்தட்ட மிகப் பெயரளவில் பறிபோய்விட்டது. மட்டக்களப்பு மாவட்டம் பறிபோக தொடங்கிவிட்டது. இந்தநிலையில் கிழக்குடன் வடக்கு இணைந்தால் மாத்திரம்தான் கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் வடக்கிலுள்ள தமிழ் மக்களுடன் இணையும்போது தங்களுடைய இருப்பை உறுதி செய்யக் கூடியதாக இருக்கும்.

இந்த இணைவு நடைபெறவில்லை என்றால் கிழக்கு மாகாணத்தில் இருக்கும் தமிழ் மக்கள் 15 ஆண்டுகளில் இருந்த இடம் தெரியாது அழிந்து போகக் கூடிய ஆபத்து இருக்கிறது.

ஆகவே, இவை எல்லாவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமாக இருந்தால் இந்த இனவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு தமிழர் தேசம் ஒன்று அங்கீகரிக்கப்பட்ட தீர்வு எட்டப்பட வேண்டும்-என்றார். (அ)

# மோ.சைக்கிள் பந்தயம்; 18 இளைஞர்கள் கைது

கொழும்பு, செப். 17

பிலியந்தலை - ஜாலியகொடை பகுதியிலுள்ள கிளை வீதியொன்றில் பந்தயத்துக்காக மோட்டார் சைக்கிள் செலுத்திய 18 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிற்பகல் முதல் நள்ளிரவு வரை மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கரவண்டிகள் பந்தயத்தில் ஈடுபடுவதாக பொலிஸாரின் அவசர இலக்கத்திற்குத் தொடர்ந்தும் முறைப்பாடுகள் கிடைத்தன.

அதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்த குழுவினர் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது 18 பேர் கைது செய்யப்பட்டதுடன், 12 மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# உச்சபட்ச விலையை மீறி அரிசி விற்பனையாகிறது

கொழும்பு, செப். 17

நாட்டின் பல பகுதிகளில் உச்சபட்ச விலையை மீறி அரிசி விற்பனை செய்யப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது நாட்டு அரிசி 1 கிலோகிராம் 220 ரூபாயாகவும் சம்பா அரிசி 1 கிலோகிராம் 230 ரூபாயாகவும் விற்பனை செய்வதற்கு உச்சபட்ச விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனினும், சந்தையில் 1 கிலோகிராம் நாட்டு அரிசி 235 ரூபாய்க்கும் சம்பா அரிசி 245 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# போட்டியிலிருந்து விலக மாட்டேன்!

## கூறுகின்றார் ஜனாதிபதி ரணில்



கொழும்பு, செப். 17

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலகுவதற்கான எந்தவொரு தயார்ப்படுத்தல்களும் அல்லது தீர்மானங்களும் இல்லையென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் அரசியல் தலைவர்கள், சாதாரண மக்களைக் கைவிட்டுள்ளதாக அநுரகுமார திஸாநாயக்க கூறுகிறார்.

தொழிலாளர் வர்க்கத்தைப் பற்றி இவ்வளவு கவலை இருந்தால், பொருளாதார நெருக்கடியில் ஏன் அவர் நாட்டை ஏற்கவில்லை. தற்போது நான் ஜனாதிபதித் தேர்தலிலிருந்து விலகுவதாக அவர் கூறுகின்றார்.

நான் ஜனாதிபதி வேட்பாளர் போட்டியிலிருந்து விலகத் தயாராவதாகக் கூறுகின்றனர். நான் பதவி விலகுபவன் அல்ல, அவர்களைப் போல் ஓடும் காலணி அணிந்தவர் அல்ல நான்.

2025ஆம் ஆண்டு இறுதிக்குள் மக்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைப்பதே தமது பிரதான நோக்கமாகும். இப்போது பொருட்களின் விலையைக் குறைப்பதாகச் சொல்கின்றனர். சலுகைகள் வழங்கப்படும் எனக் கூறுகின்றனர்.

திசைக்காட்டியின் விஞ்ஞாபனத்தில் அனைத்தும் குறைக்கப்பட்டுள்ளதுடன், அவற்றை நடைமுறைப் படுத்தினால் அரசாங்கத்தின் செலவு அதிகரிக்கும்-என்றார். (அ)

# மாவட்ட செயலக அதிகாரிகளின் கடமைகளுக்கு பெரும் இடையூறு

கொழும்பு, செப். 17

நுவரெலியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி உட்பட மாவட்ட செயலக அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தனியார் கட்டுமான உரிமையாளர் ஒருவர் அண்மையில் மாவட்ட செயலகத்துக்கு சென்று தமது கட்டுமானத்திற்குத் தேவையான நிலுவைத் தொகையை வழங்குமாறு கோரியுள்ளார்.

அத்துடன், அவர் மாவட்ட செயலகத்தில் முறையற்ற விதத்தில் செயல்பட்டதாக நுவரெலியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதல்கட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# எஸ். ரி. எவ்வினரின் சீருடைகளுடன் இளைஞன் கைது

கொழும்பு, செப். 17

மாத்தறை, தெவிநுவர பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் சீருடைகளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹெனேகெதர, கபுகம பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞனே கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஏதேனும் குற்றச் செயலுக்கு தயாராக இருந்துள்ளதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர். தொடர்ந்தும் பொலிஸார் அவரிடம் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (அ)

### கிழக்கு பாடசாலைகளின் மெய்வன்மை

# 28 தங்கப் பதக்கங்களுடன் பட்டிருப்பு வலயம் சம்பியன்

மட்டக்களப்பு, செப். 17

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகளில் 189 புள்ளிகளைப் பெற்று மட்டக்களப்பு, பட்டிருப்பு கல்வி வலயம் சம்பியனானது.

குறித்த கல்வி வலயம், 28 தங்கப் பதக்கங்களுடன் 189 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றது.

பட்டிருப்பு கல்வி வலய பாடசாலைகள் அடிப்படையில், 95 புள்ளிகளுடன் களுதாவளை மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) 95 புள்ளிகளையும் செட்டிபாளையம் மகா வித்தியாலயம் 58 புள்ளிகளையும், மண்டூர் சக்தி மகா வித்தியாலயம் 18 புள்ளிகளையும், பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலம் 5 புள்ளிகளையும், மகிழூர் சரஸ்வதி மகா வித்தியாலயம் 5 புள்ளிகளையும், மண்டூர் விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் 5 புள்ளிகளையும், தேற்றாத்தீவு மகா வித்தியாலயம் 3 புள்ளிகளையும், கோட்டைக் கல்லாறு மகா வித்தியாலயம் ஒரு புள்ளியையும் பெற்றன.

பதக்கப்பட்டியலின் அடிப்படையில் 12 தங்கப்பதக்கங்களுடன் களுதாவளை மகா வித்தியாலயம் முதலாம் இடத்தையும் 10 தங்கப்பதக்கங்களுடன் செட்டிபாளையம் மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் 03 தங்கப்பதக்கங்களுடன் மண்டூர் சக்தி மகா வித்தியாலயம் மூன்றாம் இடத்தையும், பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலயம், மகிழூர் சரஸ்வதி மகா வித்தியாலயம், மண்டூர் விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் என்பன தலா ஒரு தங்கப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டன. (எ)

# தேர்தல் பணிமனையை தாக்கி சேதமாக்கியவர் கிளிநொச்சியில் கைது!

கிளிநொச்சி, செப். 17

கிளிநொச்சி முரசுமோட்டை பகுதியில், ஐக்கிய மக்கள் கூட்டணியின் தேர்தல் அலுவலகத்தை சேதப்படுத்த குற்றச்சாட்டில், நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தேர்தல் அலுவலகம், கடந்த 10 ஆம் திகதி அதிகாலை சேதமாக்கப்பட்டதுடன், பொருட்கள் சிலவும் எடுத்துச் செல்லப்பட்டன.

இது தொடர்பாக, கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.09.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.